# ஆண்டு அறிக்கை

## 2021

# இலங்கை போக்குவரத்துச் சபை

உள்ளடக்கம்


01 தொலைநோக்கு, பணி, குறிக்கோள்கள்

02 அறிமுகம்

03 தலைவரின் செய்தி

04 செயற்திறனும் முன்னேற்ற மீளாய்வும்

05 கணக்கீட்டுக் கொள்கைகள்

06 நிதிக்கூற்றுகள்

07 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

### தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த போக்குவரத்தாளர்

### பணி

பொது மக்களுக்கு பாதுகாப்பான நம்பத்தகுந்த வசதியுள்ள வீதிப் பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அரப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்தி வளமிக்க பணியாளரின் மூலம் சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக் கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையை பேணும் நிறுவனமாக இயங்கல்.

### இலக்குகளும் குறிக்கோள்களும்

1 12 பிராந்திய அலுவலகங்கள் மூலம் சிறந்த தரமுடைய பயனுடைய பஸ் சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்.

2 பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்.

3 பண நோக்கங்களுக்காக தனியார் துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப்பட்டுள்ள வருவாய் அற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்.

4 புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்.

5 பொது தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

6 விழாக்கள், விசேட வைபவங்கள், பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள், முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

7 தபால்களையும் பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

8 பஸ் செயலாற்றலுக்காக பொது திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகள், உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தல்.

9 இ.போ.ச சாரதிப் பயிற்சி பாடசாலைகளில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காறுடைய சாரதிகளை அளித்தல்.

10 சாரதிகளுக்கும் நடாத்துநர்களுக்கும் பொறிவலர்களுக்கும் மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள், தொழிற் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11 பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12 வயது வந்தோர்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு விகிதங்களில் பருவகால சீட்டுக்களை அளித்தல்.

13 முக்கியமான மாற்று உறுப்புக்களை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரேஹேன்பிட்டியில் உள்ள இ.போ.ச தலைமையகத்தில் இடப் பெயர்ச்சி களஞ்சியம் ஒன்றை பேணல்.

14 சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும திடீர் பரிசோதனைக் குழு செவ்வை பார்த்தல் முதலியவற்றையும் நடாத்துதல்.

## அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இக்கூற்று வீதிப் பயணப் போக்குவரத்துக்கும் விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும் நகரங்களையும் அதன் மூலம்முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கிறது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்பட்ட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.ச வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏக போக உரிமையை கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்து சட்டத்தின் மூலம் இ.போ.சபையுடன் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்துச் சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.ச வை பன்முகப்படுத்தியன் மூலம் உருவானது. சிறிய அளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும் உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொது மக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்துவதன் மூலம்அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும் பொருளாதாரம் சுதந்திரமயமாக்கப்படல் வேண்டும் என்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச மக்கள் மயமாக்கப்படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார்மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தமையினால் இம்மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம் பெற்றது.

மக்கள் மயப்படுத்தலின் போது இயங்கிய 93 போக்குவரத்து சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாயின. ஊழியர் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக்கம்பனிகளின் நிருவாகத்தை நடாத்தியது. மக்கள் மயமாக்கல் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப் பட்டமையினால் விரும்பிய விளைவுகளை அடைய முடியவில்லை.

எனவே 1977 ஆம் ஆண்டு 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் திருத்தம் மூலம் பஸ்கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ்கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. மேலதிகமான பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக் கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன் இன்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல் தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ்கம்பனிகளில் நிலவிய சில பிரச்சினைகள் ஆகும்.

மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்து சபை தாபிக்கப்பட்டது.

***தலைவரின் செய்தி***

2021.01.01 முதல் 2021.12.31 ஆம் திகதிவரையான காலவெல்லைக்குரிய இலங்கை போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச) ஆண்டு அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். 2022.12.09 ஆந் திகதி நான் இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவராக பதவியேற்றேன். பரிசீலனையிலுள்ள காலத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவராக நான் பதவிவகிக்கவில்லையாயினும் 2021 ஆம் ஆண்டுக்குரிய இ.போ.ச ஆண்டறிக்கைக்கு நான் செய்தி அளிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கையிலுள்ள பாரிய அரச நிறுவகங்களில் இ.போ.ச வும் ஒன்றாகும். தேசியமயத்திற்கு முன்னர் போக்குவரத்து அமைப்பு முறையை விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தனிப்பட்ட பஸ் உரிமையாளர்களே ஒழுங்கு செய்தனர். தேசிய செல்வம் ஒரு சிலரின் கரங்களில் மாத்திரம் திரண்டு கிடப்பது நியாயமற்றதென்பதாலும், தேசிய செல்வம் எல்லோர் மத்தியிலும் சமனாக பகிரப்பட வேண்டுமென்பதாலும் பஸ் சேவைகள் தேசிய மயமாக்கப்பட்டன. எனவே இ.போ.சவின் முன்னேற்றம் இந் நிறுவனத்தின் ஊழியர்களிலும் முகாமைத்துவத்திலுமே தங்கியுள்ளதென்பதை அறிந்து கொள்வது உசிதமாகும்.

பரிசீலனையிலுள்ள ஆண்டில் இ.போ.ச சராசரி நாளொன்றுக்கு 3358 பஸ்களை செயலாற்றியது. செயலாற்றிய மொத்த கிலோ மீற்றர்த் தொகை 247.8 மில்லியனாகும். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 19.09% ஆல் குறைந்து காணப்படுகிறது. இக்குறைவு 58.5 மில்லியன் ஆகும்.

2021 ஆம் ஆண்டில் வழிப்பட்டியல் வருவாய் 13,607.5 மில்லியன் ரூபாவாகவிருந்தது.2020 ஆண்டின் வழிப்பட்டியல் வருவாய் 16,783.7 மில்லியன் ரூபாவாகும். இதற்கேற்ப முந்திய ஆண்டைக் காட்டிலும் 3,179.8 மில்லியன் ரூபாய் வீழ்ச்சியடைந்துள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. இது 18.94% வீழ்ச்சியாகும். இங்கனம் வருவாய் குறைவிற்கு 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோயின் நேரடிப் பாதிப்புக்கள் காரணமாகும். அதற்கேற்ப 2021 ஆம் ஆண்டு தொழிற்பாட்டு நட்டம் 3,054.5 மில்லியன் ரூபாவாகும். இதனை 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 45.12% வீழ்ச்சி காணப்படுகிறது.

திறைசேரியால் வழங்கப்பட்ட நிதி ரூபா1298.68 மில்லியன் மூலம் 485 எஞ்சின்களும், 440 கியர் பெட்டிகளும் 343 பஸ் உடற் கோப்புகளும் பழுதுபார்க்கப்பட்டன. பஸ்களில் நெருக்கடியைக் குறைக்கும் நோக்குடன் பஸ்கள் செயலாற்றும் எண்ணிக்கையைக் அதிகரிப்பதற்கும், காலை, மாலை சேவைகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாயினும், 2020 மார்ச் மாதம் 19 ஆம் திகதியிலிருந்து கொவிட் 19 தொற்று நோய் பரவலால் 2021 ஆம் ஆண்டிலும் நிட்சயமற்ற நிலைமை நிலவியதிலிருந்து காலத்திற்குக் காலம் நாட்டை முடக்கியதாலும், இடைக்கிடையே பல்வேறு பிரதேசங்கட்கு இடையே பயணங்களை மட்டுப்படுத்தியமையாலும் பஸ் செயலாற்றல் நடவடிக்கைகளும் இ.போ.ச வின் இதர தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் வழமை போல் செயலாற்றாது நலிவுற்றன என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆயினும் அவ்வேளையில் நாட்டின் அத்தியாவசிய சேவையாக விளங்கும் இ.போ.ச பஸ் சேவை சௌக்கிய துறையிலுள்ள ஊழியர்கட்கும் மற்றும் இதர அத்தியாவசிய

சேவைகளான மற்றைய அரச நிறுவனங்களின் உழியர்கட்கும், கொவிட் நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும், கொவிட் நோயாளிகளைக் கூட்டிச் செல்பவர்கட்கும், இளைப்பாற்றி ஊதியம் பெறுவோருக்கும் , பொலிசார் உட்பட முப்படையினர்க்கும் மற்றும் இதையொத்த அத்தியவாசிய சேவையினருக்கும் போற்றத்தகு விதத்தில் இ.போ.ச போக்குவரத்து வசதிகளை வழங்கியது என்பதை மகிழ்சசியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

முக்கியமாக கொவிட் தொற்று நோய் பரவல் காணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நிதி செயற்திறன் 2021 ஆம் அண்டில் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆயினும் நிலைமை தற்போது சீர்திருந்தி வருகிறது. இ.போ.ச சராசரி தற்போது செயலாற்றலுக்கு விடுவிக்கும் 5050 பஸ்களில் ஏறத்தாழ 4700 பஸ்கள் செயலாற்றக்கூடியதாயுள்ளது. சராசரி நாளாந்த வழிப்பட்டியல் வருவாய் 172 மில்லியன் ரூபா அளவில் உள்ளது. மேலும் தற்போது இலங்கை போக்குவரத்துச் சபையால் முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் சுற்றறிக்கை 02/2016 ற்கேற்ப 2019.01.01 திகதி முதல் PL1, PL2, PL3 சம்பளம் சீர் செய்யப்பட்டு முடிவுற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சபையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக இ.போ.சபையின் சகல பணியாளர்களும் பணிப்பாளர் சபையும் அளிக்கும் பங்கையிட்டு நான் பெரிதும் உவகை எய்துகிறேன். அரச கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாண்புமிகு போக்குவரத்து அமைச்சருக்கும், மாண்புமிகு பஸ் போக்குவரத்துச் சேவை, புகையிரத சேவை, மற்றும் மோட்டார் வண்டி கைத்தொழில் இராசாங்க அமைச்சருக்கும் மற்றும் விசேட அக்கறையுடைய ஏனையோருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

தற்போது கொவிட் 19 நோய்காரணமாக எழுந்துள்ள நிலைமைக்கு முகம் கொடுக்கும் சக்தியும் திடசங்கற்பமும் எமக்குண்டு. இ.போ.ச அபிவிருத்திக்கும் சுபீட்சத்திற்கும் நாமெல்லோரும் ஒருமித்து பயணிக்க வேண்டியது முக்கியமாகும்.

**எஸ்.எம்.டீ.எல்.கே.த அல்விஸ்**
**தலைவர்**
**இலங்கை போக்குவரத்து சபை**

**<u>செயலாற்றல் பகுதி</u>**

01. 2021ஆம் ஆண்டில் செயலாற்றலுக்கு நாளொன்றுக்கு அளிக்கப்பட்ட சராசரி பஸ் தொகை 5364 ஆகும். செயலாற்றியபஸ்களின் தொகை நாளொன்றுக்கு சராசரி 3354 ஆகும். நாளொன்றுக்கு செயலாற்றிய சராசரி கிலோமீற்றர் தொகை ஏறத்தாழ 0.67 மில்லியனாகும். நாளொன்றுக்கு ஈட்டிய சராசரி வழிப்பட்டியல் வருவாய் கிலோமீற்றரொன்றுக்கு ரூ 54.89ஆகும். 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் காரணமாக செயலாற்றலுக்கு அளிக்கப்பட்ட பஸ் தொகையிலும், செயலாற்றிய கிலோமீற்றர் தொகையிலும் பாரிய பின்னடைவு ஏற்பட்டது.

02. இ.போ.சபையால் அளிக்கப்படும் விடியற்காலை, பிந்திய இரவு நேர பஸ் பயணங்கள் பயணிகளின் தேவைக்கேற்ப அதிகரிக்கும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. இ.போ.சபையால் புகையிரத இணைப்புச் சேவையை மேம்படுத்தும் முகமாக பயணிகளின் தேவைக்கேற்ப புகையிரத நிலையங்களிலிருந்து புறப்படும் சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கும் புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

04. ‘‘சிசுசறிய‘‘ திட்டத்தின் கீழ் 741 சிசுசறியபஸ் சேவைகள் வரை செயலாற்றக் கூடியவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் பாடசாலைகளினதும் மாணவர்களினதும் தேவையையும் வேண்டுகோள்களையும் கருத்திற்கொண்டு இச்சேவைகளைப் பலப்படுத்தி விரிவுபடுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

05. சகல பஸ்களிலும் இலத்திரனியல் பயணச்சீட்டு இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் பயணிகட்கு அளிக்கப்படும் சேவையின் வினைத்திறனையும் உற்பத்தி வளத்தையும் உயர்த்த முடிந்துள்ளது.

06. கொவிட் நோய்ப் பரவல் காலத்தில் தனியார்துறை பஸ் செயலாற்றல் முற்றாக நலிவுற்றதால், அத்தியாவசிய சேவைகட்கும், அலுவலர்கள் போக்குவரத்துச் சேவைகட்கும் இ.போ.ச. பஸ்களை ஈடுபடுத்தியது.

**இ.போ.சவினால் சமூக நலனுக்குப் பங்களிப்பு**

**விடியற் காலையிலும் பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப்பயணங்கள் செயலாற்றல**

விடியற்காலையிலும், பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப் பயணங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கிராமிய பணியாளர்களின் போக்குவரத்திற்கு நேரடியாகப் பங்களிப்பினும் நெடுங்காலமாக இதனால் கிட்டுவது நல்லெண்ணம் மாத்திரமேயாகும். ஆயினும் இ.போ.ச ஆற்றுகின்ற மற்றுமோர் சமூக கடமையெனக் கருதி இச்சேவைகள் பயணஞ் செய்யும் பொதுமக்களுக்காக தொடர்ந்தும் செயலாற்றப்படுகின்றன.

**கிராமியப் பிரதேசங்களில் பஸ் செயலாற்றல்**

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும்முகமாக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்து ஊடகமாக நேரடிப் பங்களிப்பை வழங்கிவருவது இ.போ.சபையேயாகும். பயணிகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இச்சேவைகளைத் தொடர்ச்சியாக அளிப்பதற்கு எப்போதும் நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் புதிய பஸ்களை கொள்வனவுசெய்து இச்சேவைகளைத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் இச்சேவைகளை மேம்படுத்தும் திட்டங்கள் தீட்டப்படுவது எதனாலென்றால் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு கிராமப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது ஒரு காரணக் கூறாக இருப்பதனாலாகும்.

**ப ாடசாலை பஸ் சேவைகள் செயலாற்றல்**

இ.போ.சபை எதிர்கால சந்ததியைக் கருத்திற் கொண்டு பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கு பிரமாண்டமான சேவையாற்றி வருகிறது. பயணிகள் தேவைகளிற்கேற்ப நீண்டகாலத்திற்கு உயர்ந்த இலாபமீட்டக்கூடிய சந்தரப்பங்களைப் பயன்படுத்தாது, எதிர்கால சந்ததியினரின் நன்மையைக் கருத்திற் கொண்டு உரியநேரத்திற்கு பிள்ளைகள் பாடசாலைகட்குக் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

**செயலகப் பகுதி**

போக்குவரத்துப் படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் **பணிப்பாளர் சபைக் 2021ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 01 ஆம் கூட்டம் | - | 2021.01.29 |
| 02 ஆம் கூட்டம் | - | 2021.03.15 |
| 03 ஆம் கூட்டம் | - | 2021.04.06 |
| 04 ஆம் கூட்டம் | - | 2021.05.17 |
| 05 ஆம் கூட்டம் | - | 2021.06.28 |
| 06 ஆம் கூட்டம் | - | 2021.07.28 |
| 07 ஆம் கூட்டம் | - | 2021.10.04 |
| 08 ஆம் கூட்டம் | - | 2021.10.26 |
| 09 ஆம் கூட்டம் | - | 2021.11.12 |
| 10 ஆம் கூட்டம் | - | 2021.11.29 |
| 11 ஆம் கூட்டம் | - | 2021.12.13 |
| 12 ஆம் கூட்டம் | - | 2021.12.28 |

2021 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

**இலங்கை போக்குவரத்து சபையின் மேற்குறித்த பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்துவது தொடர்பான நடவடிக்கைகள்**.

1. பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெறவிருக்கும் தினத்தை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் இ.போ.ச பகுதி /பிரிவு தலைவர்கட்கும் அறிவித்தல் விடுத்தல்.

2. சபை விஞ்ஞாபனங்களை பொறுப்பேற்று விஞ்ஞாபன இலக்கத்தை இட்டு பதிவுசெய்ததன் பின்னர் கோவை தயாரித்து பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடம் கையளித்தல்.

3. பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய சுற்றறிக்கை கடிதங்களை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் கூட்ட நிகழ்ச்சிநிரலை தயாரித்தல்.

4. நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்பவும் தலைவரின் அறிவுறுத்தலின் பேரிலும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களையும் சுற்றறிக்கைக் கடிதங்களையும் சமர்ப்பித்தல்.

5. அவ்வந்த பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்துக்கும் சுற்றறிக் கை கடிதத்துக்கும் தொடர்பாக பணிப்பாளர் சபை அளிக்கும் தீர்மானங்களையும் இடைநேர்விளைவான தீர்மானங்களையும் சரியாக அறிக்கையிட்டு பணிப்பாளர் சபை தீர்மானங்களை விடய இலக்கத்திற்கேற்ப தயாரித்தல்.
6. அவ்வாறு குறிப்பிட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானங்களுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர், தீர்மானங்களில் தனிப்பட்ட தேர்வு செய்யப்பட்ட பகுதிளைப் பிரித்தெடுத்து உரிய இ.போ.ச பகுதித் தலைவர்கள்/பிரிவுத் தலைவர்களுக்கு அனுப்புதல்.
7. இந் நடவடிக்கைகள் யாவும் சரியாகவும் அந்தரங்கமாகவும் முறையாகவும் நிறைவேற்றப்படுதல்.
8. இ.போ.ச பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படும்பகுதி/பிரிவுத் தலைவர்கட்கும் உபசரணை அளித்தல்.
9. பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.சஅலுவலர்கள் அல்லாதோருக்கு) பணிப்பாளர்சபைஉறுப்பினர்களுக்குகூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அமர்வுப் படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

10. பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.சஅலுவலர் அல்லாதோர்) பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு

## இலங்கைப் போக்குவரத்து சபைக் காணிகள் சொத்துக்கள் தொடர்பில் நிறைவேற்றிய நடவடிக்கை

(1) “அன்டர்சன் கொல்வ் லிங்ஸ்“ மைதானத்தில் அமைந்துள்ள காணியில் இபோச ஷாலிக விளையாட்டரங்கும் வரவேற்பு மண்டபமும் அமைந்துள்ளன. இக்காணி அரசிற்கு சொந்தமானது. அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இக்காணியை உரித்தளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கேற்ப திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் உரிய கோப்பு பூரணப்படுத்தப்பட்டு காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. காணி ஆணையாளர் நாயகம்

காணி அமைச்சினூடாக சனாதிபதி செயலகத்திற்கு கோப்பை அனுப்பி இலவச கொடைச் சான்றிழதழுக்கு மேன்மைதங்கிய ஜனாதிபதியின் உருப்படி கையொப்பம் பெறப்பட்ட பின்னர் இட உரித்து இபோசவிற்கு அளிப்பதற்கு எதிர்பாரக்கப்படுகிறது.

(2) இலங்கைப் போக்குவரத்து சபையின் ஏக்கல வேலைக்களம் அமைந்துள்ள காணிக்கு இலவச கொடைச் சான்றிதழ் பெறுவதற்கு உரிய மீதி நடவடிக்கைகள், காணி ஆணையாளர் நாயக அலுவலகத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன.

(3) 1957ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து சட்டத்திற்கேற்ப பஸ் கம்பனிகள் தேசிய மயமாக்கப்பட்டபோது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் உரித்தாக்கப்பட்ட காணிகளினதும் சொத்துக்களினதும் சொத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக போக்குவரத்து அமைச்சரும் காணி அமைச்சரும் ˙ இணைந்த அமைச்சரவை விஞ்ஞாபன வரைவு உரிய இணைப்புகளுடன் இராஜங்க அமைச்சிற்கு அனுப்பபட்டுள்ளது.

(4) இலங்கைப் போக்குவரத்துச்சபை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து கொள்வனவு அடிப்படையில் பெற்ற உரித்து கையளிக்கப்பட்ட காணிக்கு அவ்வாணைக் குழுவிடமிருந்து சாட்டுதல் உறுதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கேற்ப எற்கெனவே இபோச மத்துகமை, ஹக்மன சாலைகள அமைந்துள்ள காணிகட்கு சாட்டுதல் உறுதி பெறப்பட்டது.

(5) இபோச உடகமுல்லை சாலை அமைந்துள்ள காணி 44ஆம் பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்டது.

(6) ஹோமமகமை பழைய பஸ் நிலையக் காணி வீதி அபிவிருத்திக்காக உரித்தளிக்கப்பட்ட 10.9 பேச்சஸ் காணித் துண்டுக்குரிய சொத்துவப் பரிசோதனை மூலம் நட்டஈட்டு மதிப்பீட்டுத் தொகையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(7) தறணியகல சாலை அமைந்துள்ள காணி, காணி சீர்திருத்தக் குழுவினால் விற்பனையாளர் மூலம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(8) மாத்தறை சாலைக் காணிக்குரிய பிரகடன உறுதிபெறல்.

(9) இபோசவால் உரிமை கோரப்படும் காணிக்கு இலவச நன்கொடை சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உதாரணம் - வெரகெரை காணி, கட்டுபெத்த இபோசவல் உபயோகிக்கப்படும் காணி)

(10) இபோசவால் உரிமை கோரப்படும் காணிகட்கு தெளிவான உரித்தைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச செயலகங்களுடன் இணைப்பு ஏற்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள.

(11) கடவத்தை சாலைக் காணிக்கு் இலவச நன்கொடைச் சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இலங்கைப் போக்குவரத்துச் சபையால் கையகப்படுத்தப்பட்ட காணித் துண்டுகட்கான நட்டஈடும் வட்டியும் பெறல்**

| தொடர் இல. | காணி அமைந்துள்ள இடமும் பரப்பளவும் | நட்டஈடு / வட்டித் தொகை (ரு) | காசோலை இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|
| 01 | கொழும்பு – ஹொறணை வீதி விஸ்தரிப்பிற்காக கொழும்பு மூல மாதிரிப்பட 9258 வரைபடத்தின் 302ஆம் இலக்கக் 0.0012 ஹெக்டேயர காணித்துண்டு கைக்கொண்டதற்காக அளிக்கப்பட்ட நட்டஈட்டின் வட்டித் தொகை கொடுப்பனவு | 80,487.27 | இலங்கை வங்கி பிலியந்தலைக் கிளை காசோலை இல. 078852 திகதி 2021.05.03 காசோலை |
| 02 | கொழும்பு – ஹொறணை வீதி விஸ்தரிப்பிற்காக கொழும்பு மூல மாதிரிப்பட 9258 வரைபடத்திலர் 303ஆம் இலக்க 0.0081 ஹெக்டேயர காணித்துண்டு கைக்கொண்டதற்காக அளிக்கப்பட்ட நட்டஈட்டின் வட்டித் தொகை கொடுப்பனவு | 589,739.84 | இலங்கை வங்கி பிலியந்தலை கிளை காசோலை இல. 086304 திகதி 2021.05.04 காசோலை |
| 03 | கொழும்பு – ஹொறணை வீதி விஸ்தரிப்பிற்காக கொழும்பு மூல மாதிரிப்பட 9258 வரை படத்தில் 243ஆம் இலக்க 0.0074 ஹெக்டேயர் காணியின் பகுதியும் 243ஆம் இலக்க காணித்துண்டு 0.00135 ஹெக்டேயர காணித்துண்டுகட்குரிய நட்டஈட்டின் வட்டித்தொகை கொடுப்பனவு | 1,652,145.75 | இலங்கை வங்கி காசோலை பிலியந்தலைக கிளை இல. 091698 திகதி 2021.07.22 காசோலை இல HOF R000018116/221, 2021.08.16 ஆந் திகதி பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது. |
| 04 | கஸ்பாவ – பொக்குனுவிற்ற வீதி விஸ்தரிப்பின் போது கைக்கொள்ளப்பட்ட கஸ்பாவ இபோச சாலைக் காணிக்குரிய கொழும்பு மூல மாதிரிப்பட இல. 9243 வரைபடத்தில் 303ஆம் காணிக்கு அளிக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகையின் வட்டித் தொகை கொடுப்பனவு | 7,256,702.65 | இலங்கை வங்கி பத்திரமுல்லை கிளை – காசோலை இல. 495885 திகதி 2021.10.15 காசோலை |

## பாதுகாப்பு பிரிவு

(1 ) 2021ஆம் ஆண்டில் புலனாய்வு பூரணப்படுத்தப்பட்டு ஒழுக்காற்றுப் பகுதிக்கு கையளிக்கப்பட்ட கோப்புகள் தொகை 49ஆகும்.

(2) 2021ஆம் ஆண்டில் 05 அவசர பரிசோதனைகள் நடைபெற்றமை (அவசர பரிசோதனை நடவடிக்கைகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கான காரணம் நாட்டில் பாரிய தொற்றுநோய் பாதிப்பாகும்.

## உள்ளகக் கணக்காய்வுப் பகுதி

### நிதிப் பிரிவு

01. சகல களஞ்சியங்களிலும் ஆண்டு செவ்வை பார்த்தலை முறைப்படி மேற் கொள்ளல்

02. பிரதான காசேடு, நாளாந்த காசேடு, கொடுப்பனவு வவுச்சர். காசு கிடைக்கப் பெற்றவை மற்றும் வருவாய் ஒருங்கு சேர்த்தல் கணக்காய்வு

03. கணக்கீடு ‘பக்கேஜ்’ உபயோகித்து கணக்கு அலுவல்களை ஒழுங்குபடுத்தல்

### தொழிநுட்பப் பிரிவு

01. எஞ்சின் கூறு பழுதுபார்த்தலும் கியர்ப் பெட்டி பழுது பார்த்தலும்

02. டயர் நுகர்வை பரிசோதித்தல்

### நிருவாகப் பிரிவு

01. மனிதவள தகவல் முறையைச் செயற்படுத்தல்

### அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு

01. பல்வேறு அறிக்கைககளை தயாரித்து சமர்ப்பித்தல்

### செயலாற்றுப் பிரிவு

01. அரச நிறுவகங்கட்கு இலவச செல்கைச் சீட்டு வழங்குதலும் பணம்பெறுதலும்
02. பருவகாலச் சீட்டு விற்பனை வருவாயை ஆகக்கூடிய அளவு உயர்த்தல்

### ஏனையவை

01. 2021 ஆம் ஆண்டின் செயற்திட்ட செயற்பாடு

02. பணிக்கொடைக் கணக்காய்வு

03. தலைவரினால் சமரப்பிக்கப்படும் விசேட கணக்காய்வு நடவடிக்கைகள்

04. கணக்காய்வு உரையாடல்களை நடாத்துதல்

05. கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களை நடாத்துதல்

06. அரச கணக்காய்வு விசாரணைக்கான மறுமொழிகளை மேற் பார்த்தல்

** கொரொனா தொற்று நோய் காரணமாக நாடு பூராவும் தனிமைப்படுத்தல் செயற்படுத்தப்பட்டமையால் கணக்காய்வு தொழிற்பாடுகள் நலிவுற்றன.

## மனித வள முகாமைத்துவப் பகுதி

30000/- ரூபா மாதாந்த படியில் முற்றும் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட்ட சாரதி / நடாத்துநர் நியமனங்கள்

| **நியமனத் தன்மை** | **எண்ணிக்கை 2021** |
|---|---|
| ஒப்பந்த சாரதிகள் | 146 |
| ஒப்பந்த நடாத்துநர்கள் | 181 |
| மொத்தம் | 324 |

**நிறைவேற்று நியமனங்கள் பற்றிய விவரம்**

| **நியமனத் தன்மை** | **எண்ணிக்கை 2021** |
|---|---|
| நிரந்தர நியமனங்கள் | - |
| தழுவல் நியமனங்கள்/ஒப்படை | 110 |
| பதவி உயர்வுகள் | - |
| தழுவல் நியமனங்கள்/ நிரந்தரப்படுத்தல்கள் | - |
| இடமாற்றங்கள் | 51 |
| ஒப்பந்த நியமனங்கள் | 05 |
| புதிய ஆட்சேர்ப்புகள் | - |
| மொத்தம் | **166** |

**மீளவேலையளித்தல்**

| **நியமனத்தின் தன்மை** | **எண்ணிக்கை 2021** |
|---|---|
| மீளவேலை | 171 |
| மொத்தம் | **171** |

**செய்முறைப் பயிற்சியளித்தல்**

| **நியமனத்தின் தன்மை** | **எண்ணிக்கை 2021** |
|---|---|
| கணனிப் பிரிவு பயிற்சி | 11 |
| கணக்குப் பிரிவு பயிற்சி | 05 |
| தொழிநுட்ப பிரிவு பயிற்சி | 14 |
| மொத்தம் | 30 |

**நிறைவேற்றுத்தரம் அல்லாத இடமாற்றங்கள்**

| **நியமனத்தின் தன்மை** | **எண்ணிக்கை- 2021** |
|---|---|
| இடமாற்றம் | 415 |
| மொத்தம் | 415 |

**ஒழுக்காற்றுப்பிரிவு**

**ஒழுக்காற்று கோவை விவரம்**

| **நியமனத்தின் தன்மை** | **எண்ணிக்கை-2021** |
|---|---|
| விசாரணை முடிந்தஒ ழுக்காற்றுக் கோவைகள் | 1399 |
| முடிந்த மேன்முறையீட்டு விசாரணைக் கோவைகள் | 64 |
| மொத்தம் | **1463** |

ஈ திடீர்ப் பரிசோதனைக் குழுப் பிரிவு

**2021 ஆம் ஆண்டில் திடீர்ப் பரிசோதனைகளின் முன்னேற்ற அறிக்கை (தலைமை அலுவலகம்)**

| மாதம் | குழுக்கள் எண்ணிக்கை | செவ்வை பார்த்தல் எண்ணிக்கை | செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை | பாரதூரமான குற்றங்கள் (IV) | சிறு குற்றங்கள் (V) | தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை | விதித்த தண்டப் பணம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 20 | 353 | 5,076 | 57 | 51 | 113 | 46,430.00 |
| பெப்ரவரி | 24 | 371 | 4,830 | 99 | 70 | 127 | 55,548.00 |
| மார்ச் | 29 | 386 | 5,501 | 65 | 58 | 92 | 38,180.00 |
| ஏப்ரல் | 21 | 305 | 4,008 | 37 | 57 | 65 | 32,756.00 |
| மே | 16 | 141 | 1,632 | 11 | 8 | 4 | 1,666.00 |
| யூன் | 10 | 58 | 563 | 9 | 1 | 1 | 356.00 |
| யூலை | 19 | 303 | 2,967 | 44 | 25 | 25 | 9,675.00 |
| ஆகஸ்ட் | 12 | 131 | 1,438 | 9 | 19 | 12 | 5,096.00 |
| செப்தம்பர் | 07 | 54 | 298 | 12 | 0 | 0 | - |
| ஒக்டோபர் | 18 | 402 | 3,930 | 25 | 55 | 43 | 15,795.00 |
| நவம்பர் | 25 | 352 | 4,282 | 54 | 64 | 54 | 21,593.00 |
| டிசெம்பர் | 13 | 282 | 3,508 | 57 | 47 | 41 | 17,830.00 |
| மொத்தம் | **214** | **3,138** | **38,033** | **479** | **455** | **577** | **244,925.00** |

## மத்திய திடீர்ப்பரிசோதனைக் குழுவின் முன்னேற்றம் – 2021 ஆம் ஆண்டு

| மாதம் | குழுக்கள் எண்ணிக்கை | செவ்வை பார்த்தல் எண்ணிக்கை | செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை | பாரதூரமான குற்றங்கள் (IV) | சிறு குற்றங்கள் (V) | தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை | விதித்த தண்டப் பணம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 5 | 97 | 1,281 | 34 | 0 | 27 | 13,918.00 |
| பெப்ரவரி | 5 | 94 | 1,129 | 56 | 1 | 31 | 13,612.00 |
| மார்ச் | 5 | 93 | 1,069 | 31 | 0 | 7 | 3,972.00 |
| ஏப்ரல் | 5 | 72 | 826 | 22 | 0 | 0 | - |
| மே | 5 | 26 | 316 | 8 | 0 | 0 | - |
| யூன் | 3 | 16 | 137 | 8 | 0 | 0 | - |
| யூலை | 5 | 35 | 369 | 18 | 0 | 0 | - |
| ஆகஸ்ட் | 1 | 4 | 37 | 1 | 0 | 1 | 356.00 |
| செப்தம்பர் | 3 | 35 | 244 | 6 | 0 | 0 | - |
| ஒக்டோபர் | 4 | 46 | 544 | 9 | 0 | 2 | 592.00 |
| நவம்பர் | 4 | 40 | 475 | 29 | 3 | 5 | 2,072.00 |
| டிசெம்பர் | 4 | 52 | 531 | 28 | 0 | 2 | 688.00 |
| மொத்தம் | 49 | 610 | 6,958 | 250 | 4 | 75 | 35,210.00 |

## ❖ அபிவிருத்தி திட்டமிடல் பகுதி

## திட்டம் தயாரித்தலும் மாதாந்த முன்னேற்றமும்

| 2021ஆம் ஆண்டில் நடைபெற்ற செயற்றிட்டங்களும் செயல்களும் | 31/12/2021 திகதியன்று முன்னேற்றம் |
|---|---|
| 2022ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி செயற்றிட்டமும் 2022 – 2024ஆம் ஆண்டுக்கான கூட்டாண்டுத் திட்டம் தயாரித்தல் | 2022 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி, செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டு 106/12.01.2021 பத்திரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக 131/ 23.12.2021 இலக்க பத்திரத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டது. அங்ஙனமே 2022-2024 ஆண்டுகள் தொடர்பான கூட்டண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு 107/ 13.11.2021 இலக்க பத்திரத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் |

| | |
|---|---|
| | செய்யப்பட்ட திருத்தங்கள் 130/ 22.12.2021 இலக்க பத்திரத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டது. |
| 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு மே மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | 2022 ஜனவரி முதல் டிசெம்பர் வரை கூட்டங்கள் நடைபெற்ற விதத்தில் மாதாந்த முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சின் முன்னேற்ற மீளவாய்வுக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டன. |
| 2021ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு யூலை மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |
| 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | |

## பல்வேறு அறிக்கைகள் தயாரித்து சமர்ப்பித்தல்

| உத்தேச நடவடிக்கைகள் | பௌதிக இலக்கு |
|---|---|
| சபை தொடர்பான சகல புள்ளிவிபரங்களைத் திரட்டி நாளது வரையாக்கல் | 2021ஆம் ஆண்டுக்குரிய செ-51 அறிக்கைகள், உதவிப் பண விவரம், பஸ் புனருத்தாரணம் விவரம் அடங்கலாக சபையுடன் தொடர்புடைய சகல புள்ளிவிபரத் தகவல்களையும் திரட்டி நாளது வரையாக்கும் பணி முடிவுற்றது. |
| தகவல் அலுவலர் கோரும் தகவல் அநுமதிக்கப்பட்ட விதத்தில் வழங்கலைச் செயற்படுத்தல் | ஆண்டுக்குள் தகவல் கோரும் உரிமைச் சட்டத்தின கீழ் 35 தகவல் மடல்கள் கிடைக்கப்பெற்று உரிய 35 கடிதங்கட்கும் தேவையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்ஙனமே 05 மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்று அவற்றுக்கு வேண்டியவாறு பங்குகொள்ளலும் இணக்க மூலமும் பிணக்குகள் தீர்க்கப்பட்டன. |
| மாதாந்த இலாப நட்டக் கணக்கும் நிதிப்பாய்ச்சல் அறிக்கையும் தயாரித்தல் (மாகாண வேலைக்களம் / சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் / சுற்றுலா பங்களாக்கள் உட்பட) | ஜனவரி முதல் டிசெம்ப் மாதவரை மாதாந்தம் சகல சாலைகளிலும் ஏனைய அலகுகளிலும் இலாப நட்ட நிதிப்பாய்ச்சல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. |
| மாகாண வேலைக்களம் சாரதி பயிற்சிப் பாடசாலைகள் சுற்றுலா பங்களாக்கள் தொடர்பான மாதாந்த முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் | வேண்டிய போது மாகாண வேலைக்களங்கள் சாரதி பயிற்சிப் பாடசாலைகள், சுற்றுலா பங்களாக்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. |
| கண்காய்வு முகாமைத்துவ குழு அறிக்கை தயாரித்தலும் சமர்ப்பித்தலும் | கணக்காய்வு முகாமைத்துவக்குழு கூட்டங்களின் அறிக்கைகள் தேவைக்கேற்றவாறு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. |
| போக்குவரத்து அமைச்சும் இதர அரச நிறுவனங்களும் கோரும் விசேட அறிக்கைகள் தயாரித்தல் | போக்குவரத்து அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தேசிய பௌதிக திட்டவமைப்பு திணைக்களம் ஜனாதிபதி செயலகம் போன்ற இதர நிறுவனங்களுக்கு மாதாந்த காலாண்டு, ஆண்டு ரீதியாக கோரும் அறிக்கைகளும் விசேட அறிக்கைகளும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டன. |

- **கேள்விப்பத்திர சபைப்பிரிவு**

**2021.01.01ஆந் திகதி முதல் கேள்விப்பத்திர சபைப் பிரிவால் விலை கோரப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது.**

| தொடர் இல. | திகதி | ஆற்றியபணி | கேள்விப்பத்திரம்திறந்ததிகதி |
|---|---|---|---|
| 01 | 2021.01.04 | Quotation for the Supply & Delivery of Optical face Shields for SLTB | 2021.01.13 |
| 02 | 2021.01.20 | இபோச பஸ்களுக்குத் தேவையான பயணிச் சீட்டுப் புத்தகங்களும், பயணப் பொதிச் சீட்டு புத்தகங்களும் அச்சிடல் | 2021.01.27 |
| 03 | 2021.01.20 | 2021 ஆம்ஆண்டுக்கானபருவகாலச்சீட்டுக்கள்அச்சிடல் | 2021.01.27 |
| 04 | 2021.01.25 | இபோச சலைகள், பிராந்திய அலுவலகங்கள், மாகாண வேலைத்தளங்கள் ஆகியவற்றுக்காக வெளியா பாதுகாப்புச் சேவை பெற்றுக்கொள்ளல் – மனுக்கள் திறப்பு போக்குவரத்து அமைச்சில் | 2021.02.22 |
| 05 | 2021.01.25 | இபோசவிற்கு சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட பஸ்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்குத் தகுதி வாய்ந்த விற்பனையாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல். | 2021.02.15 |
| 06 | 2021.02.25 | இபோச தலைமை அலுவலகத்தின் சிற்றூண்டிச்சாலையை நடாத்துவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரல். | 2021.02.02 |
| 07 | 2021.02.08 | Invitation for Bid for obtaining Insurance coverage for buses and Official Vehicles of SLTB for the year – 2021/2022 | 2021.02.12 |
| 08 | 2021.02.17 | Quotation for the Supply and Delivery of Toners for SLTB | 2021.03. |
| 09 | 2021.03.10 | Quotation for the Supply and Delivery Desktop Computers UPS, Laptop Computer and Laser Printers to SLTB | 2021.03.10 |
| 10 | 2021.02.23 | இபோச கடவத்தை, மாவனெல்லை, எம்பிலிப்பிட்டி, கொக்கலை சாலைகளில் 'சீபெற்கோ' எரிபொருள் நிரப்பும் நிலையங்களைத் தாபிக்கவும், கட்டடங்களைத் திட்டமிடவும் கூறுவிலை கோரல். | 2021.03.19 |
| 11 | 2021.03.01 | Quotation for the Supply and Delivery Desktop Computers UPS, Laptop Computer and Laser Printers to SLTB | 2021.03.10 |
| 12 | 2021.03.02 | Provision of uniforms to STB Security Guards – 2021. | 2021.03.16 |
| 13 | 2021.03.03 | Invitation to Bid for Providing of Annual Insurance Coverage for Rathmalana Fuel Filling Station & money Transits of SLTB Head Office Finance Division | 2021.03.10 |
| 14 | 2021.03.03 | இபோச ஷலிகா வரவேற்பு மண்டபத்தைப் பழுதுபார்த்தற்காக கூறுவிலை கோரல். | 2021.03.23 |
| 15 | | இபோச பாதுகாப்புக் காவலர்கட் கு சீருடை அளித்தல் - 2021 | 2021.03.23 |
| 16 | 2021.03.12 | ஷலிகாவிளையாட்டரங்கிற்கு 'டம்பர்' இயந்திரமொன்றை கொள்வனவுசெய்தல். | 2021.03.29 |
| 17 | 2021.03.25 | இபோச பொத்துவில் சாலைப் பொறியியல்ப் பகுதி திருத்தகத்தையும் கட்டடங்களையும் பழுதுபார்ப்பதற்கு கூறுவிலை கோரல். | 2021.04.09 |
| 18 | | அம்பாறை தயர்த் தொழிற்சாலைக் குபவின் இயந்திரமும், டயர் அமைக்கும் இயந்திரமும் கொள்வனவு செய்யகூறுவிலை கோரல். | 2021.04.20 |

| | | | |
|---|---|---|---|
| 19 | 2021.04.02 | இபோச இரத்தினபுரி சாலைக் கட்டடங்களின் கூரைகளைப் பழுதுபார்ப்பதற்கு கூறுவிலை கோரல். | 2021.04.20 |
| 20 | 2021.04.02 | இபோச இரத்தினபு ரிசாலையின் நிருவாகக் கட்டடங்களின் கூரைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய தகடுகளிற்கான கூறுவிலைகோரல். | 2021.04.23 |
| 21 | 2021.04.06 | 295/8 x 22.5.டயர்முன்பதனிடுவதற்கானகூறுவிலைகோரல். | 2021.04.28 |
| 22 | 2021.04.08 | Bid for the Supply and Delivery of Office & Rest Room Furniture for SLTB (Kandy South Depot) | 2021.08.08 |
| 23 | 2021.04.20 | இபோச ஷலிகா விளையாட்டரங்கின் கழிவு நீர்ப் பாதை அமைப்பை மாநகரக கழிவு நீர்ப் பாதை அமைப்புடன் இணைத்தல். | 2021.05.07 |
| 24 | 2021.04.09 | Limited Bid for the Supply of 200 nos. new Diesel Air Conditioned Low flow Buses for the SLTB | 2021.05.11 |
| 25 | 2021.04.09 | இபோசவிற்கு 21,600 புதிய டயர்களைக் கொள்வனவு செய்தல் . (2021 – 2022 ஆம்ஆண்டுகட்கு | |
| 26 | 2021.04.21 | பயணஞ் செய்யும் பொதுமக்களுக்கா க 20,000 ஒட்டுத்தாள்களை அச்சிடல். | 2021.04.30 |
| 27 | 2021.04.27 | இபோச நீண்ட தூர பஸ் சேவைகட்கு ஆசனங்களை ஒதுக்கீடு செய்தல். | 2021.05.18 |
| 28 | 2021.05.04 | இபோச முல்லைத்தீவு சாலையில் 5000 கலன் கொண்ட எரிபொருள் தாங்கியை தாபித்தல். | 2021.05.24 |
| 29 | 2021.05.04 | இபோச மத்திய பஸ் அலுவலகத்தின் இலங்கை வங்கி கட்டடத்தைப் பழுபார்ப்பதற்கான நடவடிக்கை தொடர்பாக. | 2021.05.24 |
| 30 | 2021.05.04 | Supply & Delivery of 02 Nos. Standard 30 seater (2x2) Diesel buses to SLTB | 2021.05.31 |
| 31 | 2021.05.04 | இபோச சாரதி/நடாத்துநர்கட்கான முகமறைப்புகளைக் கொள்வனவு செய்தல். | |
| 32 | 2021.05.10 | இபோச நீர்கொழும்பு சாலை பழுபார்த்தலும் பேணலு ம் தொடர்பாகப் பிரதான களஞ்சியத்தின் எல்லைச் சுவரும் கூரையும், தயர் களஞ் சியத்தின் எல்லைச் சுவரும் கூரையும், மலசலகூட முறைமை பழுதுபார்த்தலும் | 2021.05.25 |
| 33 | 2021.05.12 | இபோச பஸ்கட்குத் தேவையான 150Amph புதிய பற்றிறிகள் 400 கொள்வனவு செய்தல் | 2021.06.08 |
| 34 | 2021.06.29 | இபோசவிற்கு தேவையான ரியூப்புகளும் மடிப்புகளும் கொள்வனவு செய்தல் | 2021.06.16 |
| 35 | 2021.06.29 | இபோசவிற்கு தேவையான 60,000 மீற்றர் றெக்சின் | 2021.07.13 |
| 36 | 2021.06.29 | 2021ஆம் ஆண்டுக்கு இபோச பஸ்களுக்குத் தேவையான மாற்றுறுப்புக்களை கொள்வனவு செய்தல் | 2021.07.16 |
| 37 | 2021.06.29 | இபோசவிற்குத் தேவையான அலுமினியம், சிங்கு பூசப்பட்ட தகடுகளை கொள்வனவு செய்தல் | 2021.07.19 |
| 38 | 2021.06.29 | 295/80 R 22.5.புதிய ரியூப்பற்ற 1100 றேடியல் டயர்களைக் கொள்வனவு செய்தல் | 2021.07.13 |

| | | | |
|---|---|---|---|
| 39 | 2021.06.29 | இபோச முல்லைத்தீவு சாலையில் 5000 நிலத்தின் கீழானஎரிபொருள் தாங்கியை தாபித்தல் | 2021.07.07 |
| 40 | 2021.06.29 | இபோச மத்திய பஸ் நிலையஅ லுவலகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கட்டட பழுதுபார்த்தல் | 2021.07.07 |
| 41 | 2021.06.29 | இபோச நீர்கொழும்பு சாலை பழுதுபார்த்தல் பராமரிப்பு நடவடிக்கை சம்பந்தமாக | 2021.07.09 |
| 42 | 2021.06.29 | இபோசவிற்கு மாதாந்த வாடகை செலுத்தும் அடிப்படையில் வாகனங்கள் கொள்வனவு செய்தல் | 2021.07.22 |
| 43 | 2021.06.29 | 2021ஆம் ஆண்டில் அம்பாறை தயர் தொழிற்சாலைக்குத் தேவையான உற்பத்தி மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் | 2021.07.22 |
| 44 | 2021.06.29 | இபோச மத்திய பஸ் நிலைய அலுவலகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கட்டடத்திற்கு பழுதுபார்த்தல் | 2021.07.14 |
| 45 | 2021.06.29 | இபோச முல்லைத்தீவு சாலையில் 5000 கலன் எரிபொருள் தாங்கியை நிலத்துக்கடியில் தாபித்தல் | 2021.07.14 |
| 46 | 2021.07.16 | இபோச நீர்கொழும்பு சாலை பழுதுபார்த்தலும், பேணுத லும்பிரதான களஞ்சிய எல்லைச்சுவரும் கூரையும் தயர் களஞ்சியத்தின் எல்லைச் சுவரும்கூ ரையும் மலசலகூடமுறைமை பழுதுபார்த்தல் | 2021.07.22 |
| 47 | 2021.07.21 | இபோசவிற்கு 30 ஆசனங்கள்கொண்ட 02 சிறுபஸ்கள்கொள்வனவுசெய்தல் | 2021.07.26 |
| 48 | 2021.07.21 | கழுதாவளை மாகாணவேலைக்களத்தில் புதியடயர் தொழிற்சாலையை அமைப்பதற்கான நடவடிக்கையும் அம்பாறை தயர் தொழிற்சாலையின் உற்பத்தியளவை அதிகரிப்பதற்கான புதிய இயந்திர உபகரணங்களை அளித்தல். | |
| 49 | 2021.05.11 | Bid for the Supply & Delivery of Lubricant Oil – Rarus 427 | 2021.08.03 |
| 50 | 2021.07.19 | 2021 ஆம் ஆண்டுக்கான வர்ணத்தைக் கொள்வனவு செய்தல் | 2021.08.05 |
| 51 | 2021.07.22 | இபோச பஸ்களுக்குத் தேவையான (150Amph) பற்றறிகள் கொள்வனவு செய்தல் | 2021.08.16 |
| 52 | 2021.07.27 | Annual Requirement of Stationary Items | 2021.08.09 |
| 53 | 2021.07.27 | Annual Requirement of Toners & Ink Ribbons. | 2021.08.09 |
| 54 | 2021.08.05 | சீட்டு இயந்திரங்கட்குத் தேவையான சீட்டுச்சுருள்களைக் கொள்வனவு செய்தல் | 2021.08.27 |
| 55 | 2021.10.07 | Procurement Hand Sanitizer for SLTB | 2021.10.08 |
| 56 | 2021.10.18 | Quotation for Laptop Computers to SLTB | 2021.10.22 |
| 57 | 2021.10.25 | ஷலிகாவிளையாட்டரங்கிற்குப்பொலிவூட்டும்பழுதுபார்த்தல்தொடர்பாக | 2021.11.12 |
| 58 | 2021.10.28 | R 20/12 R22.5/10 R 22.5.அளவுள்ள 1000 டயர்களைக் கொள்வனவு செய்தல் | 2021.11.17 |
| 59 | 2021.11.05 | 2022 ஆம் ஆண்டுக்கான பருவகாலச் சீட்டுக்களை அச்சிடுதல் | 2021.11.19 |
| 60 | 2021.11.08 | இபோச மனிதவள முகாமைத்துவப் பிரிவிற்கு குளீரூட்டிகளைப் பெறல் | 2021.08.13 |
| 61 | 2021.11.10 | ஷலிகா வரவேற்பு மண்டப 1ஆம் கட்டடத்தின் கீழ்நடைபெற்றுக் கொண்டிருக்கும் பழுதுபார்த்தல் தொடர்பாக | 2021.11.17 |

| | | | |
|---|---|---|---|
| 62 | 2021.11.16 | அம்பாறை தயர்த் தொழிற்சாலை உற்பத்திக்கு மூலப்பொருட்கள் பெறல் | 2021.11.24 |
| 63 | 2021.11.16 | 2022 ஆம் ஆண்டுக்கான இபோச தலைமையலுவலக அலுவலக வாகன சாரதிகட்கு சீருடை பெற்றுக் கொடுத்தல் | 2021.11.29 |
| 64 | 2021.11.23 | Annual Requirement of Stationary Items’ | 2021.12.07 |
| 65 | 2021.11.24 | இபோச நிதிப்ப குதிக்குத் தேவையான ஆண்டு ஏடுகளையும் குறுவட்டுக்களையும் கொள்வனவு செய்தல் | 2021.12.07 |
| 66 | 2021.12.03 | Quotation for the Laptop Computers to SLTB | 2021.12.07 |
| 67 | 2021.12.06 | கொழும்பு கண்டி சப்ரகமுவகம்பஹாநுவரெலியாபிராந்தியங்களைச் சேர்ந்த சாலைகளில் ஓராண்டு காலத்துள் விற்பனைக்கான கூறுவிலை கோரல் | 2021.12.28 |
| 68 | 2021.12.14 | ஊழியர்கட்கானகாப்புறுதிநட்டஈட்டுத்திட்டம்செயற்படுத்தலைகொள்ளும் நடைமுறை | 2022.01.04 |
| 69 | 2021.12.14 | இபோசஅம்பாறைதயர்த்தொழிற்சாலையில்பவின்தூள்விற்பனை | 2021.12.17 |
| 70 | 2021.12.27 | இபோசஸ்களுக்குத் தேவையான பயணச் சீட்டுப் புத்தகங்களும் பயணப் பொதிச்சீட்டுப் புத்தகங்களும் அச்சிடல் | 2022.01.10 |
| 71 | 2021.12.29 | இபோச ஷலிகாவளவைப் பழுதுபார்க்கும் பணி தொடர்பாக | 2022.01.13 |

## வினியோகப்பிரிவு

| தொடர் இல | விடயம் | செயற் திட்டத்தின் பெயர் | 2020 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய தொகை (ரூ.மில்) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்) | எய்திய இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | சகலகொள்வனவுகளும் விற்பனைகளும் நடைபெறல் | செயலாற்றல் நடவடிக்கைகளைப்பேணுவதற்குத் தேவையான பொருட்கள்கொள்வனவு | 5,000.00 | | இந்திய கடன் திட்டத்தின் கீழ் 600 பஸ்கள் கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டில் பஸ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 02 | | | 6,867.08 | | கீழ்த்தள பஸ்கள் 200 கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டில் பஸ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 03 | | | 5,000.00 | | 49 - 54 ஆசனங்களுடைய அதி உல்லாச பஸ்கள் 250 கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டில் பஸ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 04 | | | 9,250.00 | | 42-45 ஆசனங்களுடைய அதி உல்லாச பஸ்கள் 250 கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டில் பஸ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 05 | | | 240.00 | | அதி உல்லாச பஸ்கள் 12 கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டில் பஸ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 06 | | | 6,888.00 | | 765 பஸ்கள் கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கைகள் | 2021 ஆம் ஆண்டில் பஸ்கள் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 07 | | | 15,365.25 | | பஸ் அணியைப் பேணுவதற்காக டீசல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை | சந்தை விலைக்கேற்ப சாலை மட்டத்தில் தமதுதேவைக்கேற்ப கொள்வனவு செய்யப்படுகின்றது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 08 | | | 988.02 | 333.30 | பஸ்பேணல்/ பழுதுபார்த்தலுக்குமானகூறுகள் உற்பத்திக்குத் தேவையான மாற்றுறுப்புகள்கொள் வனவுசெய்ய நடவடிக்கை எடுத்தல் | அனுமதிக்கப்பட்ட விலைக்கூற்றுக் கேற்ப தலைமையலுவகம் மூலமும் சாலை மட்டத்திலும் மாற்றுறுப்புகள்கொள்வனவுசெய்யப்படுகின்றன. ஆயினும் சாலை மட்டத்தில்பெற்றுக் கொண்ட மாற்றுறுப்புகள்தொடர்பாக விலை நிரல் தலைமை அலுவலகத்தின் விநியோகப் பகுதிக்கு கிடைக்கவில்லை. இங்கே குறிப்பிடப்படுவது வினியோகப் பகுதி மூலம் சாலைகட்கு அளிக்கப்பட்ட மாற்றுறுப்புகள் விலை நிரல்கள் தொடர்பில் மாத்திரம் |
| 09 | | | 40.00 | 1.49 | பஸ்பேணலுக்கும் பழுதுபார்த்தலுக்கும் தேவையான வர்ணம் போன்ற பொருட்ளைக்கொள்னவுசெய்யவேண்டிய நடவடிக்கை எடுத்தல் | சாலைத் தேவைக்கேற்பகொள்வனவு நடவடிக்கை நடைபெறுகிறது |
| 10 | | | 742.87 | 429.94 | பஸ்பேணலுக்கும் பழுதுபார்த்தலுக்கும் தேவையான புதிய டயர்கள் கொள்வனவுசெய்தல் | 2021.12.31ஆந் திகதியன்றுள்ளவாறாக 12.120 புதிய டயர்கள் தேவைக்கேற்ப கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. 12,120 தயர்கள் கொள்வனவு செய்ப்பட்டு சாலைகட்கு அளிக்கப்பட்டன. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | | | 243.00 | | பஸ் அணியைப்பேணுவதற்குவேண்டிய 600 யூடோங் டயர்களைக்கொள்வனவு செய்தல் | தேவைக்கேற்ப அநுமதிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவு செய்ய அறிவுறுத்துரைக்ள வழங்கப்பட்டுள்ளன. |
| 12 | | | 104.09 | | பஸ் அணியைப் பேணுவதற்குவேண்டிய 2400  றேடியல் டயர்களைக்கொள்வனவு செய்தல் | தேவைக்கேற்ப அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவுசெய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன |
| 13 | | | 143.94 | 120.08 | பஸ் அணியைப் பேணுவதற்குவேண்டிய 6000 புதிய பற்றறிகள் கொள்வனவு செய்ய வேண்டிய நடவடிக்கை | 2020.12.31 ஆந் திகதியன்றுள்ளவாறாக 2989 புதிய பற்றறிகள் கொள்வனவுசெய்யப்பட்டுள்ளது. |
| 14 | | | 540.00 | | பஸ் அணியைப் பேணுவதற்குவேண்டிய 1080 புதிய எஞ்சின்களைப் பழுதுபார்து வினியோகித்தல் | தேவைக்கேற்றவாறு அநுமதித்த நிறுவகங்கள்  மூலம் சாலை மட்டத்தில் பழுதுபார்ப்பதற்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 15 | | | 360.00 | | பஸ் அணியைப் பேணுவதற்குத் தேவையான 1800 கியர்ப்பெட்டிகளைப் பழுது பார்த்து விநயோகித்தல் | தேவைக்கேற்றவாறு அநுமதித்த நிறுவகங்கள்  மூலம் சாலை மட்டத்தில் பழுதுபார்ப்பதற்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | | | 180.00 | | பஸ் அணியைப்பேணுவதற்குத்தேவையான 6000 ஸ்டாடர் மோட்டர்களைப் பழுது பார்த்து விநியோகித்தல் | சாலைத் தேவைக்கேற்ப பிரதேசங்கள் மூலம் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. செலவிட்ட தொகை தொடர்பில் பிரதேச மட்டத்திலிருந்து வினியோகப் பகுதிக்கு அனுப் பப்படவில்லை |
| 17 | சகலகொள்வனவுகளும் விற்பனைகளும் நடைபெறல் | செயலாற்றல் நடவடிக்கைகளைப்பேணுவதற்குத் தேவையான பொருட்கொள்வனவு | 144.00 | | பஸ் அணியைப் பேணுவதற்குத் தேவையான 4800 ஆடலாக்கிகளை பழுது பார்த்து விநியோகித்தல் | சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. செலவிட்ட தொகை தொடர்பில் பிரதேச மட்டத்திலிருந்து வினியோகப் பகுதிக்கு அனுப் பப்படவில்லை |
| 18 | | | 1200.00 | | பஸ் அணியைப் பேணுவதற்குத்தேவையான எரிபொருள் பம்பிகளை பழுது பார்த்து வினியோகித்தல் | சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. செலவிட்ட தொகை தொடர்பில் பிரதேச மட்டத்திலிருந்து வினியோகப் பகுதிக்கு அனுப் பப்படவில்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19 | | | 21.00 | | பஸ் அணியைப் பேணுவதற்குத் தேவையான 6000 எரபொருள் உட்பாய்ச்சிகளை பழுது பார்த்து விநயோகித்தல் | சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியங்கள் மூலம் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. செலவிட்ட தொகை தொடர்பில் பிரதேச மட்டத்திலிருந்து வினியோகப் பகுதிக்கு அனுப் பப்டவில்லை |
| 20 | | | 68.30 | | பஸ் அணியைப் பேணலுக்கும் பழுது பார்த்தலுக்கும் தேவையான வில்லுத் தகடுகளைக் கொள்வனவுசெய்வதற் குத் தேவையான ஒழுங்குளைச் செய்தல் | சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியங்கள் மூலம் பழுது பார்த்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. செலவிட்ட தொகை தொடர்பில் பிரதேச மட்டத்திலிருந்து வினியோகப் பகுதிக்கு அனுப் பப்படவில்லை |
| 21 | | | 386.56 | | பஸ் அணியைப் பேணுவதற்கான எண்ணெயும் கிறீசும் கொள்வனவு செய்ய வேண்டி நடவடிக்கை எடுத்தல் | சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியங்கள் மூலம் சாலை மட்டத்தில் கொள்வனவு செய்ய அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 22 | | | 1,489.06 | | பஸ் பேணலுக்கு அவசியமான டயர்களை மீள நிரப்பலும் முன் பதனிடலுக்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்துசாலை மட்டத்தில் மீள நிரப்பவும் முன்பதனிடலுக்கு மான அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டன |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 23 | | | 207.84 | | தேவைக்கேற்றவாறுசீட்டுச் சுருள்களும் சீட்டுப் புத்தகங்களும் கொள்வனவு செய்தல் | தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து சாலை மட்டத்தில்கொள்வனவுசெய்ய அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 24 | | | 05.58 | 01.48 | தேவைக்கேற்ப பருவ காலச் சீட்டுக்களை அச்சிட்டு வினியோகித்தல் | சாலைத்தேவைக்கேற்ப அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 25 | | | 11.92 | 4.61 | இபோச செயலாற்றல்/ நிருவாகத்திற்குத்தேவையான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவுசெய்து வினியோகித்தல் | தேவைக்கேற்றபடி உபகரணங்களை கொள்வனவுசெய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன |
| 26 | | செயலாற்றல் நடவடிக்கைகளைப் பேணுவதற்கு வேண்டிய பொருட்களை | 8.00 | | பஸ் அணியைப் பேணுவதற்கு வேண்டிய இலத்திரனியல் பஸ் பயணச்சீட்டு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தல் | 2021 ஆம் ஆண்டில் பயணச்சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை |
| 27 | | | 258.05 | 1.67 | 06 மடிக்கணினிகளைக் கொள்வனவு செய்ய தேவையான நடவடிக்கை | தேவைக்கேற்ப பெற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28 | | | 550.00 | 45.00 | இபோச கட்டடங்களுக்கும் வளவுகளுக்கும் பழுது பார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் | இபோச தலைமையலுவலம் மூலம் சிவில் ஒப்பந்த பழுது பார்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள 45 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. |
| 29 | சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் நடைபெறல் | செயலாற்றல் நடவடிக்கைகளைப்பேணுவதற்குத் தேவையான பொருட்கள்கொள்வனவு | 133.05 | 3.00 | இபோச கட்டடங்களுக்கும் வளவுகளுக்கும் புதியசெயற் திட்டங்களுக்கும் மின்சார பேணலுக்கும் தேவையான பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல் | தேவைக்கேற்றபடி பெற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

❖ **விசேட புலனாய்வு அலகு**

| வருடம் | விசாரணைகளை முடித்து தலைவர் / பிரதம நிறைவேற்று அலுவலர் /பிரதிப் பொது முகாமையாளர் செயலாற்றப் பாதுகாப்பு புலனாய்வு கண்காணிப்பு அலுவலர் / உதவி மனிதவள முகாமையாளர் (ஒழுக்காறு) / ஆகிய பகுதிகட்கு அனுப்பியுள்ள புலனாய்வு அறிக்கை எண்ணிக்கை |
|---|---|
| 2021 | 24 |

## ❖ தொடர்பாடல் தொழிநுட்பவியல் பகுதி

| உத்திகள் | முறைகள் | உத்தேச செயல்முறை | செயற்திட்டத்திற்கு வேண்டிய நிதி | செயற்திட்டம் | | நிதி இலக்கு | | | | பௌதிக இலக்கு | | | | முடிந்த இலக்கு | செயற்படுத்தும் | எதிர்பார்க்கும் நன்மைகள் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆரம்பதிகதி | முடிவுதிகதி | காலாண்டு | | | | காலாண்டு | | | | | | | |
| | | | | | | 1 | 2 | 3 | 4 | 1 | 2 | 3 | 4 | | | | |
| தகவல் தொழிநுட்பவியல் வசதிகளை மேம்படுத்தல் | தொழிநுட்பவியல்உபகரணங்களைகொள்வனவு செய்தல் | ° கணினி கொள்வனவு | 21.00 | 2021.01.01 | 2021.04.30 | | 21.00 | | | கணினிகள்இ 150 | | | | கணினிகள்150 | இலங்கை போக்குவரத்துச் சபை | நிறுவகவினைத்திறன், வளம் | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் முகாமைத்துவம் |
| தகவல் தொழிநுட்பவியல் வசதிகளை மேம்படுத்தல் | தொழிநுட்பவியல்உபகரணங்களைகொள்வனவு செய்தல் | ° மடிக்கணினி கொள்வனவு | 5.40 | 2021.01.01 | 2021.04.30 | | 5.40 | | | மடிக்கணினி 36 | | | | மடிக்க ணினி36 | | | |
| தகவல் தொழிநுட்பவியல் வசதிகளை மேம்படுத்தல் | தொழிநுட்பவியல்உபகரணங்களைகொள்வனவு செய்தல் | அச்சிடும்இயந்திரம் | 2.50 | 2021.01.01 | 2021.04.30 | | 2.50 | | | | | அச்சிடும்இயந்திரம் 100 | | அச்சிடும்இயந்திரம் 100 | | | |

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழிநுட்ப வியல் வசதிகளை மேம்படுத்தல் | தொழிநுட்பவியல்உபகரணங்களைகொள்வனவு செய்தல் | UPS கொள்வனவு செய்தல் | 0.75 | 2021.01.01 | 2021.04.30 | | 0.75 | | | ரூ 150 | | UPS 150 | | UPS 150 | | | |
| தகவல் தொழிநுட்ப வியல் வசதிகளை மேம்படுத்தல் | தொழிநுட்பவியல்உபகரணங்களைகொள்வனவு செய்தல் | கைவிரல்அடையாள இயந்திரம் கொள்வனவு செய்தல் | 5.20 | 2021.01.01 | 2021.04.30 | | | | | | 5.20 | 150 கைவிரல்அடையாள இயந்திரம் கொள்வனவு செய்தல் | | 150கைவிரல்அடையாள இயந்திரம்கொள்வனவுசெய்தல் | | | |
| தகவல் தொழிநுட்ப வியல் வசதிகளை மேம்படுத்தல் | தொழிநுட்பவியல்உபகரணங்களைகொள்வனவு செய்தல் | SOLAR SYSTEM (3KW) | 132.00 | 2021.01.01 | 2021.12.31 | | | 33.00 | 33.00 | 33.00 | 33.00 | SOLAR SYSTEM (3KW) | | SOLAR SYSTEM (3KW) 132 | | | |
| தகவல் தொழிநுட்ப வியல் வசதிகளை மேம்படுத்தல் | தொழிநுட்பவியல்உபகரணங்களைகொள்வனவு செய்தல் | CCTV கமரா முறை தாபித்தல் | 79.20 | 2021.01.01 | 2021.09.30 | 26.40 | 26.40 | 26.40 | | CCTV கமரா 132 | | | | CCTV கமரா 132 | | | |

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழிநுட்ப வியல் வசதிகளை மேம்படுத்தல் | Android Mobile System **செயற்படுத்தல்** | சரியான தகவலை அறிந்துகொள்ளவசதி அளித்தல். | 10.00 | 2021.01.01 | 2021.12.31 | 2.50 | 2.50 | 2.50 | 2.50 | பூர்வாங்க கலந்துரையாடல் | உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தல் | முன்னோடி செயற்திட்டம் வடிவமைத்தல் | நாடு பூராவும் செயற்திட்டம் அமுல்படுத்தல் | சரியான தகவலை அறிந்துகொள்ளவசதி அளித்தல். | | | |
| தகவல் தொழிநுட்ப வியல் வசதிகளை மேம்படுத்தல் | Android Mobile System **செயற்படுத்தல்** | 1200 நீண்ட தூர பஸ்கள் பூர்த்தி | 30.00 | 2021.02.01 | 2021.12.31 | | 10.00 | 10.00 | 10.00 | பூர்வாங்க கலந்துரையாடல் | உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தல் | முன்னோடி செயற்திட்டம் வடிவமைத்தல் | நாடு பூராவும் செயற்திட்டம் அமுல்படுத்தல் | 1200 நீண்ட தூர பஸ்கள் பூர்த்தி | | | |

❖ **பொறியியல் பகுதி**

| | | | |
|---|---|---|---|
| எஞ்சின் பழுதுபார்த்தல் | டாட்டா 697 | சாலை | 27 |
| | | பிராந்திய வேலைக்களம் | 38 |
| | | வெளியார் | 6 |
| | லேலண்ட் 400/401/402 | சாலை | 38 |
| | | பிராந்திய வேலைக்களம் | 16 |
| | | வெளியார் | - |
| | லேலண்ட்ஹினோ | சாலை | 101 |
| | | பிராந்திய வேலைக்களம் | 256 |
| | | வெளியார் | 3 |
| | யூடோங் | சாலை | - |
| **மொத்தம்** | | | **485** |
| கியர்ப் பெட்டி பழுதுபார்த்தல் | டாட்டாGBS 40 | சாலை | 114 |
| | | பிராந்திய வேலைக்களம் | 30 |
| | லேலண்ட் G13 | சாலை | 50 |
| | | பிராந்திய வேலைக்களம் | 18 |
| | ZF லேலண்ட் | சாலை | 68 |
| | | பிராந்திய வேலைக்களம் | 159 |
| | யூடோங் | சாலை | - |
| | | பிராந்திய வேலைக்களம் | 1 |
| **மொத்தம்** | | | **440** |
| | | சாலை | 68 |

| | | | |
|---|---|---|---|
| எரிபொருள் பம்பி பழுதுபார்த்தல் | டாட்டா | பிராந்திய வேலைக்களம் | 45 |
| | | வெளியார் | - |
| | லேலண்ட் | சாலை | 124 |
| | | சாலை | 186 |
| | | பிராந்திய வேலைக்களம் | - |
| **மொத்தம்** | | | 423 |
| பஸ் உடற்கோப்பு பழுதுபார்த்தல் | | சாலை | 128 |
| | | பிராந்திய வேலைக்களம் | 215 |
| | | வெளியார் | - |
| **மொத்தம்** | | | **343** |
| எரிபொருள் உடற்பாய்ச்சி பழுதுபார்த்தல் | | சாலை | 1,418 |
| | | பிராந்திய வேலைக்களம் | 898 |
| | | வெளியார் | 84 |
| **மொத்தம்** | | | **2,400** |
| ஆடலாக்கி பழுதுபார்த்தல் | | சாலை | 672 |
| | | பிராந்திய வேலைக்களம் | - |
| | | வெளியார் | 856 |
| **மொத்தம்** | | | **1,528** |
| மோட்டார் தொடக்கி பழுதுபார்த்தல் | | சாலை | 685 |
| | | பிராந்திய வேலைக்களம் | 22 |
| | | வெளியார் | 956 |
| புனருத்தாரணம் செய்து செயலாற்றலுக்கு அளித்த பஸ்கள் | | | 213 |
| **மொத்தம்** | | | **1,876** |
| முன்பதனிட்ட தயர் உற்பத்திசெய்தல் | வெளிநிறுவனம் | 825 x 20 | 1,870 |
| | அம்பாறைதயர்தொழிற்சாலை | 825 x 20 | 11 |
| | வெளி நிறுவனம் | 900 x 20 | 28,680 |
| | அம்பாறை தயர் தொழிற்சாலை | 900 x 20 | 2,770 |
| | வெளி நிறுவனம் | 1000 x 20 | 340 |
| | அம்பாறைதயர்தொழற்சாலை | 1000 x 20 | 1 |
| | வெளி நிறுவனம் | 750 x 06 | 10 |
| | | 295/80R 22.5 Senceror Bus | 458 |
| | | 10R x 22.5 யூடோங் | 32 |
| **மொத்தம்** | | | **34,172** |
| மீளநிரப்பிய தயர் உற்பத்தி செய்தல் (வெளி நிறுவகங்கள் மூலம்) | 825 x 20 | | 556 |
| | 900 x 20 | | 8,338 |
| | 1000 x 20 | | 1,278 |
| | 295/80R 22.5 Senceror Bus | | 19 |
| **மொத்தம்** | | | **10,191** |

**சட்டப் பகுதி**

(1) இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு (இ.போ.ச) சொந்தமான பிராந்திய அலுவலகங்களிற்கும் எல்லாச் சாலைகட்கும் எதிராக வெளியாரால் தொடுக்கப்படும், இ.போ.சபையினால் இதர தரத்தினருக்கெதிராகத் தொடுக்கப்படும் சகல வழக்குகளிற்கும் நாடு பூராவுமுள்ள சகல நீதிமன்றங்களிலுமுள்ள வழக்குகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

**இதன் கீழ்**

- ❖ இ.போ.ச வழக்குகளில் இயன்றளவு சந்தர்ப்பங்களில் எல்லாம் சட்ட அலுவலர்கள் அந்தவந்த நீதிமன்றங்களில் தோற்றுதல்

- ❖ வழக்குகள் தொடர்பான நீதிமன்ற ஆவணங்களைத் தயாரித்தல்.

- ❖ சாலைகளிலும் பிரந்திய அலுவலகங்களிலுமுள்ள நீதிமன்ற அலுவலர்க்குத் தேவையான அறிவுறுத்துரைகளை வழங்கல்.

- ❖ சட்ட அலுவலர்களுடன் வெளிச் சட்டத்தரணிகளையும் சட்டமா அதிபர்திணைக்களத்தைச் சேரந்த அரச சட்டத்தரணிகளையும் தொடர்புபடுத்தல்.

- ❖ சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொண்டு சட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றி வழக்கு அலுவல்களை மேற்கொள்ளல்.

(2) இபோசபையச் சேர்ந்த பிராந்திய அலுவலகங்கள், சாலைகள், தலைமை அலுவலகத்தின் ஏனை பகுதியின் சட்டப் பிரச்சினைகட்கும் நிருவாகப் பிரச்சினைகட்கும் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்கல்

(3) இபோச வெளியார் தரப்புடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் வழங்கல் ஒப்பந்தங்கள் பொது ஒப்பந்தங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்

(4) இபோச வசமுள்ள காணிகள் தொடர்பான பிணக்குகளின் போது செயலகப் பகுதிக்கு வேண்டிய அறிவுறுத்தலை வழங்கல், வெளி நிறுவகங்களுடன் நடாத்தும் கலந்துரையாடல்களில் பங்குகொள்ளலும் அறிக்கை தயாரித்தலும். இபோசவுக்கு சொந்தமான காணிகளின் சொத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(5) தலைவரால் அனுப்பப்படும் பிணக்குகள் தொடர்பாக தேவைப்படுமிடத்து அமைச்சரவை விஞ்ஞானபனம் தயாரித்தல்.

(6) வழக்குகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய மீதி நடவடிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபைப் பத்திரம் அனுப்புதல்.

கொவிட்தொற்றுநோய் பரவல் காரணமாக 2021 ஆண்டில் அடிக்கடி அவசர காலச் சட்டம் அமுல் படுத்தப்பட்டமையாலும் இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தமையாலும் வழக்குகள் தொடரந்தும் பிற் போடப்பட்டன.

ஆயினும் 2021 ஆம் ஆண்டில் சட்டப் பகுதியில் இ.போ.ச சட்ட ஆலோசகர், பிரதம சட்ட அலுவலர், உதவிச் சட்ட அலுவலர்கள் ஆகியோர் நிறைவேற்றிய கடமைகள் தொடர்பான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பது சிக்கல் வாய்ந்ததாகையால் 2021 ஆம் ஆண்டில் சட்டப் பகுதியின் சிறப்புப் பணிகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(1) 2021 ஆம் ஆண்டில் 35 நீதிவான் நீதிமன்ற அழைப்பாணைகள், 24 மாவட்ட நீதிமன்ற அழைப்பாணைகள், 23 தொழில் மன்ற விண்ணப்பங்கள், 07 நடுவர் மன்ற வழக்குகள், 02 மீயுயர் நீதி மன்ற வழக்குகள், 02 மேன் முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் ஆக மொத்தம்166 அழைப்பாணைகள் தொடர்பில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன் அவற்றின் எதிர்கால நடவடிக்கைளும் மேற் கொள்ளப்படுகின்றன.

02) 2021 ஆம் ஆண்டில் சட்டப் பகுதியால் 19 ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டன.

03) இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்ட திருத்தத்திற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு போக்குவரத்துச் சேவை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டது

04) இபோசவில் தற்போது நடை முறையிலிருக்கும் ஒழுக்காற்று கோவையை மீளாய்வு செய்வதற்காக சட்டப் பகுதியின் அவதானிப்புரைகளை பிரதிப் பொது முகாமையாளருக்கு (நிருவாகம்) அனுப்புதல்

05) அமைச்சரவை அனுமதிப் பிரகாரம் இபோச இளைப்பாறிய ஊழியர்கட்கு பங்குச் சான்றிதழுக்குத் தொடர்புடய பணக்கொடுப்பனவு நடைபெறும்போது ஒவ்வொரு உதவிச் சட்ட அலுவலருக்கும் தொடர்புடைய தொழிற்பாடு சம்பந்தமாக அந்தந்தப் பிரதேசங்களுக்குரிய நடவடிக்கைகளைப் பரிசோதித்து விதப்புரை வழங்கல்.

06) நிருவாக கைந்நூல் திருத்தம் தொடர்பான சட்டப் பகுதியின் விதப்புரைகளை அளித்தல்

**கவனத்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள்**

1 **நிறுவக தகவல்**

1.1 **அறிக்கையிடும் நிறுவகம்**

இலங்கை போக்குவரத்துச் சபை 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டது. சபையின் பதிவு பெற்ற அலுவலகம் கொழும்பு-05, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. அதன் பிரதான வியாபார இடமும் அதே இடத்தில் உள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச) போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவகமாகும்.

1.2 **பிரதான செயற்பாடுகள்**

இவ்வாண்டில் சபையின் பிரதான செயற்பாடு சமுதாயத்திற்கு வீதிப் பயணிப் போக்குவரத்தினை ஏற்பாடு செய்வதாகும். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் குறிக்கோள் நியாயமான கட்டண முறையில் பாதுகாப்பான நம்பிக்கையுள்ள வசதியான வீதிப் பயணிப் போக்குவரத்தை அளிப்பதாகும்.

2. **ஆயத்த அடிப்படைகள்**

2.1 **இணக்க அறிக்கை**

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கட்கு (SLFRS/LKAS) அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுவரை உள்ளடங்கலாக அது வரையான காலங்கள் யாவற்றுக்கும் இ.போ.ச அதன் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கட் கேற்ப (இகநி) தயாரித்தது. 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கட்கேற்ப (SLFRS/LKAS) தயாரிக்கப்பட்டன.

நிதிக் கூற்றுகளில் நிதி நிலைக் கூற்று, முழுமையான வருவாய் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவை அடங்கும்.

2.2 **அளவிடும் அடிப்படைகள்**

நிதிக் கூற்றுகள் வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.

2.3 **ஒப்பியல் தகவல்**

நடப்புக் காலத்தின் நிதிக் கூற்றுக்களின் புரிந்து கொள்ளும் ஆற்றலை உயர்த்துவதற்காகவும், காலங்கட்கிடையே ஒப்பியல் தன்மையை மேம்படுத்து வதற்காகவும், நிதிக் கூற்றுக்களில் முந்திய காலத்திற்கு அறிக்கையிட்ட சகல தொகைகட்கும் தரமான விவரமான, விளக்கமான தகவல் உட்பட ஒப்பியல் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வேறுவிதமாக காட்டப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி இந் நிதிக் கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்ட சகல காலங்கட்கும் ஒரே சீராக இக் கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே விளக்கப்பட்டவாறு பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுகளில் உள்ள சமர்ப்பணம் அல்லது வகைப் படுத்தல்கள் திருத்தப்பட்ட விடத்து, சிறந்த சமர்ப்பித்தலுக்காக ஒப்பியல் தொகைகள் நடப்பு ஆண்டுடன் இணங்கக் கூடியவாறு மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.4 மதிப்பீடுகள், தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS) இணங்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முகாமை கணக்கீட்டுக் கொள்கைப் பிரயோகத்தைப் பாதிக்கும் ஊகங்களையும், மதிப்பீடுகளையும், தீர்ப்புகளையும் செய்ய வேண்டியதுடன், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள், வருவாய், செலவு ஆகியவற்றின் தொகையையும் அறிந்து கொள்ள வேண்டும்.

தீர்ப்புகளும், மதிப்பீடுகளும் வரலாற்று அனுபவத்தையும், சூழ் நிலைக் கேற்றவாறு நியாயமானதென நம்பக்கூடிய எதிர்பார்த்தல்கள் அடங்கிய இதர காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். எனவே உண்மையான அனுபவத்திலிருந்தும் முடிவுகளிலிருந்தும் இத் தீர்வுகளும் மதிப்பீடுகளும் வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படை ஊகங்களும் தொடர்ந்து இயங்கும் அடிப்படையிலேயே மீளவாயப்படுகின்றன. மீளவாய்தல் அக் காலத்தை மட்டுமே பாதிப்பதாயின் மதிப்பீடு மீளவாயப்படும் காலவெல்லையில் அல்லது தற்போதைய, எதிர்காலத்திற்கான இரண்டு காலவெல்லைகளையும் பாதிப்பதாயின், மீளவாயப்படும் காலவெல்லைகட்கான கணக்கீட்டு மதிப்பீடுகட்கான மீளவாய்வுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 2.5 சொத்துக்களும் அவற்றின் பெறுமதி அடிப்படைகளும்

சொத்துக்களும் அவற்றின் அடிப்படைகளும்

காசும், வங்கி மீதிகளும், அறிக்கையிடும் திகதியிலிருந்து ஓராண்டுக்குள் அல்லது சபையின் இயல்பான வியாபார தொழிற்பாட்டு வட்டத்துள் இதில் எது குறுகியதோ அதில் காசாகத் தேறுமென எதிர்பார்க்கப்படுபவையும் நிதி நிலைக் கூற்றில் நடப்புச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டனவுமாகும். நடப்புச் சொத்துக்கள் என்பது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஓராண்டுக்கு அப்பால் சபை வைத்திருக்க எதிர்பார்க்கும் சொத்துக்கள் தவிரந்த சொத்துக்களாகும்.

## 3. கவனத்திற் கொள்ள வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள்

இந் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

### 3.1 ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள்

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் கிரயத்திலும், திரண்ட தேய்மானத்தின் நிகர் தொகையிலும், திரண்ட சேதமிழப்பு ஏதானும் உளதாயின் அதிலும் கிரயத்தில் குறிப்பிடப்படுகிறது.

(அ) **உரித்தான சொத்துக்கள்**

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றின் கிரயத்தில் அதன் கொள்விலையும், சொத்தை எண்ணியவாறு உபயோகத்திற்கேற்ற வகையில் தொழிற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாக ஏற்படக்கூடிய செலவும் அடங்கும். சுய நிருமாண சொத்துக்களில் பொருள்களின் கிரயம், நேரடிக் கூலி, மற்றும் எண்ணியவாறு சொத்தின் பாவனையை தொழிற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு ஏற்படக் கூடிய இதர வேறெந்த கிரயங்களும் அடங்கும். அத்துடன் உருப்படிகளை கழற்றி நிருணயிக்கப்பட்ட நிலையத்தில் மீள அமைப்பதற்கான செலவும், தகைமை பெற்ற சொத்துக்கள் மீதான கடன்படு கிரயங்களும் இதில் அடங்கும்.

ஒரு சொத்தின் முக்கிய உள்ளுறுப்புக்கள் அடையாளங் காணப்பட்டு வேறாக மதிப்பிறக்கஞ் செய்யப்படும்.

(ஆ) **அடுத்துவரும் கிரயங்கள்.**

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் உருப்படியின் பகுதியை பதிலிடும் செலவு, அப்பகுதிக்குள் இணைந்துள்ள எதிர்கால பொருளியல் பயன்கள் சபைக்குக் கிட்டுவது சாத்தியமெனவும் அதன் கிரயம் நம்பகத்தகு தன்மையில் அளவிட முடியுமாயிருப்பினும் உருப்படியின் பதிலிடும் பகுதியின் முன் கொண்டு செல்லப்படும் தொகை ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் நாளாந்த உபயோக செலவுகள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் விடயத்திற்கேற்றவாறு ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

(இ) **தேய்மானம்**

சொத்தொன்றின் கிரயத்திற்கு அல்லது கிரயத்திற்கு பதிலிட்ட மற்றுமோர் தொகைக்கு அதன் ஈற்றுப் பெறுமதியைக் கழித்து தேய்மானமிடற் தகு தொகையில் தேய்மானம் கணக்கிடப்படுகிறது. ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் உருப்படியின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட் காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் தேய்மானம் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. ஏனெனில் இது அனேகமாக சொத்துடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார பயன்களின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு பகுதியைப் பிரதிபலிக்கிறது. குத்தகைக் கால முடிவில் கம்பனிக்கு உரித்துப் பெற முடியுமென்பது நியாயமான அளவு நிட்சயமாக விருந்தாலன்றி மற்றப்படி குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் அவற்றின் குறைவான குத்தகை காலத்திலும் அவற்றின் பயன்தரு ஆயுட்காலத்திலும் இதில் குறைந்ததெதுவோ அதற்கே தேய்மானம் தீர்மானிக்கப்படுகிறது.

<u>மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் வருமாறு</u>

| **சொத்து வகுதி** | **பயன்தரு ஆயுட்காலம் (ஆண்டுகள்)** | **தேய்மானம் (%)** |
|---|---|---|
| கட்டடங்கள் | 40 | 2.5% |
| பஸ்களும் ஏனைய வாகனங்களும் | 08 | 12.5% |
| பொறித்தொகுதியும் உபகரணங்களும் | 10 | 10% |
| தளவாடமும் பொருத்திகளும் | 10 | 10% |
| கணினிகள் | 04 | 25% |
| பஸ் எஞ்சின்கள் | 05 | 20% |

சொத்தொன்றின் தேய்மானம் அது பாவனைக்குக் கிடைக்கும் போது தொடங்குகிறது. சொத்தொன்று விற்பனைக்காக வைக்கப்பட்டதென வகைப்படுத்திய திகதியிலிருந்தும் சொத்து விலக்கப்பட்ட திகதியிலிருந்தும் இதில் எது முந்திய திகதியோ அத் திகதியிலிருந்து சொத்துக்களின் தேய்மானம் முடிவுறுகிறது.

ஏற்புடைத்தாயின் ஒவ்வோர் நிதியாண்டின் இறுதியிலும் தேய்மான முறை, பயன்தரு ஆயுட்காலம், ஈற்றுப் பெறுமதி ஆகியன மீளவாயப்படுகின்றன.

(ஈ) **விலக்கல்**

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றின் உருப்படியொன்றின் முற்கொண்டு செல்லப்படும் தொகை அவை விற்பனை செய்யப்படும் போது அல்லது அதன் பாவனையில் அல்லது விற்பனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாத விடத்து விலக்கப்படுகிறது. இதர வருவாய்க்குள் இலாபம் அல்லது நட்டம் ஏற்பிசைவு செய்யப்பட்டு விலக்கப்படும் போது ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

3.2 **குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்**

சபை பெருமளவில் சொத்துவத்தின் சகல இடர்களையுடம் பயன்களையும் மேற்கொள்ளும் குத்தகைகள் நிதிக் குத்தகைகள் என வகைப்படுத்தப்படும். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் குத்தகைக்கு விடப்பட்ட சொத்து அளவிடப்பட்டு, தற்போதைய ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவு பெறுமதியிலும் சீர்மதிப்புப் பெறுமதியிலும் இதில் எது குறைந்ததோ அத் தொகைக்கு சமனான தொகைக்கு முதலீட்டாக்கம் செய்யப்படுகிறது. ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், சொத்துக்குப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைக்கேற்ப சொத்து கணக்கிடப்படும்.

இதர குத்தகைகள் தொழிபடு குத்தகைகள் ஆகும். முதலீட்டு ஆதனத்திற்குத் தவிர மற்றப்படி சபையின் நிதி நிலைக் கூற்றில் குத்தகைச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை.

3.3 **முதலீட்டு ஆதனம்**

முதலீட்டு ஆதனம் வாடகை ஈட்டுவதற்காக அல்லது மூலதன வளர்ச்சிக்காக அல்லது இவை இரண்டையும் ஈட்டுவதற்காக அன்றி மற்றப்படி பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது நிருவாக நோக்கங்களுக்காக உற்பத்தியைப் பயன்படுத்தி வியாபாரத்தின் வழமையான செயற்பாடாக விற்பனை செய்வதற்கு வைத்திருக்கப்படுவதில்லை. முதலீட்டு ஆதனம் கிரயத்தில் அளவிடப்படுகிறது.

ஆதனப் பாவனை முதலீட்டு ஆதனத்திலிருந்து உரிமையாளர் குடியிருக்கும் ஆதனமாக மாறும் போது ஆதனம் பொறித்தொகுதி, உபகரணங்களாக மீளவகைப்படுத்தப்படுகிறது.

3.4 **நடைபெறும் மூலதன வேலையின் முதலீடு**

ஐந்தொகைத் திகதியன்று முதலீட்டாக்கம் செய்யப்படாது நடைபெறும் மூலதன வேலையில் ஆண்டில் செய்யப்பட்ட முதலீட்டு செலவுகள் முதலீடு எனக் காட்டப்படுகிறது. ஆண்டில் பயன்படுத்தப்பட்டு முதலீட்டாக்கம் செய்யப்பட்ட மூலதன சொத்துக்கள் ஆதனம், பொறித் தொகுதி, உபகரணத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

3.5 **அருவச் சொத்துக்கள்**

சொத்துக்களின் பொருளாதார பயன்கள் நிறுவகத்திற்குத் கிடைக்கக்கூடிய சாத்தியமுள்ளதெனவும் இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS3 சேத இழப்பு நட்ட சொத்துக் கேற்ப சொத்துக்களின் கிரயம் அளவிடப்பட்டு திரள் மதிப்பிறக்கத்திலும் திரள் சேத இழப்பு நட்டத்திலும் இருந்து கழித்து கிரயத்தில் கொண்டு செல்லப்படுமாயின் அருவச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படலாம்.

அருவச் சொத்துக்கு சேதமிழப்பு நட்டம் ஏற்படக்கூடிய அறிகுறி இருப்பின் அளவுள்ள பயன்களுள்ள அருவச் சொத்துக்கள் பயன்தரு பொருளாதார ஆயுட்காலத்திற்கு சேதமிழப்பிற்கு கணிக்கப்பட்டு மதிப்பிறக்கஞ் செய்யப்படுகிறது. அளவுள்ள பயன்தரு ஆயுட்காலத்துடன்கூடிய அருவச் சொத்தொன்றுக்கான மதிப்பிறக்க காலமும் மதிப்பிறக்க முறையும் ஆகக் குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையாவது ஒவ்வோர் நிதியாண்டின் முடிவிலும் மீளவாயப்படுகிறது.

நிச்சமற்ற பயன்தரு ஆயுட்காலத்துடன்கூடிய அருவச் சொத்துக்கள் ஆண்டு தோறும் சேத இழப்பிற்காக தனித்தனியாக அன்றேல் காசு பிறப்பாக்கும் அலகு மட்டத்தில் பரிசோதிக்கப்பட வேண்டும்.

## 3.6 நிதி அல்லாத சொத்துக்களின் சேத இழப்பீடு

சேத இழப்பிற்கான அடையாளம் ஏதும் உளதா எனத் தீர்மானிப்பதற்காக ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகை மீளவாயப்படுகிறது. அத்தகைய அறவீடு ஏதுமிருப்பின், சொத்துக்களின் அறவிடக்கூடிய தொகை மதிப்பிடப் படவேண்டும். சொத்தொன்றின் முன் கொண்டு செல்லப்படும் தொகை அல்லது காசு பிறப்பாக்கி அலகு அதன் அறவிடக் கூடிய தொகையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் சேதமிழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. அறவிடப் படக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்படும் மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்படுமிடத்து சேதமிழப்பு நட்டம் மீளவாயப்படும்.

## 3.7 சரக்கு தொக்குகள்

கிரயத்திலும், தேறக்கூடிய நிகர் பெறுமதியிலும் எது குறைந்ததோ அத் தொகையில் சரக்குத் தொக்குகள் அளவிடப்படுகின்றன.

சரக்குத் தொக்குகள் கிரயத்தில், கொள்விலையின் செலவுகள் யாவும்,மற்றும் மாற்ற செலவுகள், சரக்குத் தொக்குகளைத் தற்போதுள்ள இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட இதர செலவுகள் ஆகியன அடங்கும்.

தேறிய நிகர் பெறுமதியானது சாதாரண வியாபாரத்தில் கொள்விலையிலிருந்து பூர்த்தியாக்கிய செலவையும், விற்பதற்கு தேவையான மதிப்பீட்டுச் செலவையும் கழித்து வரும் தொகையாகும். ஒவ்வொரு தனிநபரின் செலவினதும், முதல் உள்வந்தது முதலில் வெளிச் செல்லும் என்ற சூத்திரத்தின் படியும் குறித்த அடையாளங் காணலை உபயோகித்தும் சரக்குத் தொக்குகளின் கிரயம் குறித்தொதுக்கப்படுகிறது.

## 3.8 நிதிச் சொத்து

### 3.8.1 ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

LKAS 39 நோக்கெல்லைக்குள் வரும் நிதிச் சொத்துக்கள் சீர்மதிப்பு பெறுமதியில் இலாப நட்டம், கடன்களும் வருமதிகளும், பருவ முதிர்வுவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள், விற்பனைக்கான நிதிச் சொத்துக்கள் ஆகியன ஏற்றவாறு நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு ஆரம்ப ஏற்பிசைவின் போது அதன் நிதிச் சொத்துக்களாக நிர்ணயிக்கப்படுகிறது.

சகல நிதிச் சொத்துக்களும் ஆரம்பத்தில் சீர்மதிப்பு பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் இலாப நட்டம், ஊடு செயற் கிரயங்கள், பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் ஆகியவற்றுக்கு நேரடியாக சாட்டப்படக்கூடிய சொத்துக்கள் சீர்மதிப்பு பெறுமதியில் காட்டப்படுவதில்லை.

இ.போ.சபையின் நிதிச் சொத்துக்கள் காசு, குறுங்கால முதலீடுகள், வணிகமும் இதர வருமதிகள், பணியாளர் கடன்கள், இதர வருமதிகள் ஆகியன அடங்கும்.

### 3.8.2 அடுத்துவரும் அளவீடு

நிதிச் சொத்துக்களின் அடுத்துவரும் அளவீடு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது.

#### (அ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துக்கள் சீர்மதிப்பு பெறுமதியில்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியிலான நிதிச் சொத்துக்களில் வணிகத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் குறிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களும் அடங்கும். கிட்டிய தவணையில் விற்கும் அல்லது மீளக் கொள்வனவு செய்யும் நோக்குடன் சுவீகரிக்கப்பட்டால் நிதிச் சொத்துக்கள் வணிகத்திற்காக வைக்கப்பட்டன என வகைப்படுத்தலாம்.

#### (ஆ) கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் நிறை சந்தையில் விலை கோரப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகள் உய்த்தறியப்படாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின் அளவிடப்பட்டு சேத இழப்பு கழிக்கப்பட்ட பின்னர் விளைவு வட்டி முறையை உபயோகித்து பின்னர் அத்தகைய நிதிச் சொத்துக்கள் கிரயத்தில் காலத் தேய்மானப்படுத்தப்படுகிறது. சுவீகரிக்கும் போது விளைவு வட்டி முறையின் அவசியமான பகுதியான கட்டணங்களும் செலவுகளின் மீதான ஏதாவது கழிவும் அல்லது கட்டுப்பணமும் கணக்கில் எடுக்கப்பட்டே காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயம் கணக்கிடப்படுகிறது. விளைவு வட்டி காலத் தேய்மானப்படுத்தல் வருவாய்க் கூற்றின் நிதி வருவாயில் உள்ளடக்கப்படுகிறது.

வருவாய்க் கூற்றில் நிதிக் கிரயத்தில் சேதமிழப்பிலிருந்து எழும் நட்டங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

#### (இ) பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்

இ.போ.ச தன்னால் முதிர்வு வரையில் வைத்திருக்கக்கூடுமென தன்னுறுதியான கருத்தும் ஆற்றலும் கொண்டுள்ள நிலையான அல்லது தீர்க்கமான கொடுப்பனவுகளும் நிலையான முதிர்வுகளும், உள்ள உய்த்தறியப்படாத நிதிச் சொத்தாக பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடாக வகைப்படுத்தப்படும். ஆரம்ப அளவீட்டீன் பின்னர் சேத இழப்பைக் கழித்து விளைவு வட்டி முறையை உபயோகித்து பருவ முதிர்வுவரை வைத்திருக்கும் முதலீடுகள் காலத் தேய்மானப் படுத்தப்பட்ட கிரயத்தில் அளவிடப் படுகிறது. தேய்மானப் படுத்தப்பட்ட கிரயம் கணக்கிடப்படுவது சுவீகரிப்பின் போது எந்த கழிவும் அல்லது காப்பீட்டுக் கட்டணமும் விளைவு வட்டி முறையின் அவசிய பகுதியான செலவுகளையும் கணக்கிலெடுத்தேயாகும். வருவாய்க் கூற்றிலுள்ள நிதி வருவாயில் விளைவு வட்டி முறை தேய்மானப்படுத்திய காலம் உள்ளடக்கப் பட்டுள்ளது. சேத இழப்பிலிருந்து எழும் நட்டங்கள் வருவாய்க் கூற்றில் நிதிச் செலவாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

(ஈ) **விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள்.**

விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகளில் உரிமையாண்மையும் கடன் பிணைகளும் அடங்கும். விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதென வகைப்படுத்தப்பட்ட உரிமையாண்மை முதலீடுகள் வணிகத்திற்காக வைக்கப்பட்ட அல்லது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதில்லை. அங்ஙனமே இவ் வகுதியின் கடன் பிணைகள் நிட்சயமற்ற காலத்திற்கு வைக்கப்பட்டு போதிய நிதி கிடைக்கப் பெற வேண்டிய தேவைகளுக்காக அல்லது சந்தை நிலைவரங்களில் மாற்றம் காரணமாக விற்பனை செய்யக் கூடியவையாகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள் பின்னர் சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்டு முதலீடு ஐந்தொகையிலிருந்து விலக்கப்படும் வரை விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்தில் ஏனைய முழுமையான வருவாயாக தேறாத ஆதாயங்கள் அல்லது நட்டங்களுடன் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.8.3 **விலக்கல்**

நிதிச் சொத்தொன்று ஏற்புடையவிடத்து நிதிச் சொத்தின் பகுதி அல்லது அதையொத்த சொத்துக்கள் பின்வரும் காரணங்கட்காக விலக்கப்படும்.

(i) சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் பெற்றுக் கொள்ளும் உரிமை முடிவடைந்திருப்பின்;

(ii) நிதிச் சொத்தில் இருந்தும் காசுப் பாய்ச்சலில் இருந்தும் உரிமையை இ.போ.ச மாற்றியிருப்பின் அல்லது “ஊடாகச் செலுத்தும்” முறை மூலம் மூன்றாம் கட்சியினருக்கு பொருண்மை தாமதமின்றி பெற்றுக் கொண்ட காசுப் பாய்ச்சல்களை முழுமையாக கொடுக்கும் கடன்பாட்டை மேற் கொண்டிருப்பின் அல்லது.

(அ) இ.போ.ச சொத்துக்களின் பயன்கள் இடர்கள் யாவற்றையும் பெருமளவில் மாற்றி அல்லது

(ஆ) சொத்துக்களின் பயன்கள் இடர்கள் யாவற்றையும் பெருமளவில் மாற்றாமல் அல்லது வைத்திருக்காமல் ஆனால் சொத்துக்களின் கட்டுப்பாட்டை மாற்றியிருப்பின்

3.8.4 **நிதிச் சொத்துக்களின் சேத இழப்பு**

ஒவ்வோர் அறிக்கையிலும் திகதியிலும் நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் குழுமம் சேதமிழக்கப்பட்டதற்கான உண்மையான சாட்சியம் எதுவும் உளதா என இ.போ.ச மதிப்பிடுகிறது. சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சம்பவங்களால் உண்மையான சேத இழப்பு ஏற்பட்டால் மாத்திரமே அதுவும் நிதிச் சொத்துகளிலோ அல்லது நிதிச் சொத்து குழுமத்திலோ நம்பத்தகுந்த விதத்தில் மதிப்பிடக் கூடிய சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதியில் எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் தாக்கம் ஏற்பட்டால் மட்டுமே நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் குழுமம் சேதமிழந்ததாக கருதப்படலாம்.

கடனாளிகள் அல்லது கடனாளிகள் குழுமமொன்று கடனிற் சிக்கியுள்ளதற்கான அறிகுறிகள், கடமைதிறம்புகை அல்லது சட்டத்திற்கு முரணாக ஒழுகல், அவர்கள் வங்குரோத்து நிலையை அடையக் கூடிய சாத்தியம் அல்லது வேறு நிதி அமைப்புகளுடன் சேரல், நிலுவைகளில் மாற்றம் அல்லது கடமை திறம்புகையுடன் தொடர்புடைய பொருளாதார நிலைமைகள் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்வில் அளவிடக் கூடிய குறைவை அவதானிக்கக்கூடிய தரவுகளிலிருந்து அறிகுறி தென்படல் ஆகியன சேதமிழப்பதற்கான சான்றுகளில் அடங்கும்.

(அ) சொத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் பயன்களும் பெரும்பாலான வேளைகளில் பொருள்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வாங்குநருக்கு கிட்டியதன் பின்னர் பொருள்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.9 **காசும் காசுக்கு சமனானவையும்**

காசும் காசுக்குச் சமமானவற்றில் காசு மீதிகள், அழைப்பு வைப்புகள், கேள்வி மீதான வைப்புகள், காசுப்பாய்வு கூற்று நோக்கங்கட்காக கோரப்படும் போது மீளச் செலுத்தக்கூடிய நிகர் வங்கி மேலதிகப் பற்றுகள், பெறுமதியில் அற்பமாக வரும் இட மாற்றங்களின் பெறுமதி, குறுகிய காலத்தில் மிகவும் எளிதில் பணமாக மாற்றக்கூடிய அறியக் கூடிய காசுத் தொகை முதலீடுகள் ஆகியன அடங்கும்.

3.10 **நிதிக் கடன்பாடுகள்**

LKAS 39 ன் நோக்கெல்லைக்குள்ளான ஆரம்ப ஏற்பிசைவு அளவீட்டு நிதி இடர்ப்பாடுகளும் காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதிக் கடன்பாடுகளாக வகைப்படுத்தப்படுகிறது அல்லது விளைவுத்திறனுடைய தளம்பற்காப்பில் தளம்பற் காப்பு சாதனமாக ஏற்புடையவாறு உய்த்தறிய முடியாதவைகளாக நியமிக்கப்படுகிறது. இ.போ.ச ஆரம்ப ஏற்பிசைவில் அதன் நிதிக் கடன்பாடுகளின் வகைப்படுத்தலைத் தீர்மானிக்கிறது.

எல்லா நிதிக் கடன்பாடுகளும் முதலில் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டு, கடன்கள், கடன்பாடுகளைப் பெறுத்த மட்டில் காலத் தேய்மானப் படுத்தப்பட்ட கிரயத்தில் முன் கொண்டு செல்லப்படுகிறது. இது ஊடு செயற் கிரயங்கட்கு நேரடியாக உட்பட்டதாகும். இ.போ.சபையின் நிதிக் கடன்பாடுகள் வணிகத்தையும் இதர செலுத்தப் படவேண்டியவைகளையும் உள்ளடக்கியுள்ளது.

3.10.1 **அடுத்து வரும் அளவீடு**

அடுத்து வரும் நிதிக் கடன்பாடுகளின் அளவீடுகள் காலத் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்திலானது.

3.10.2 **ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்**

நிதிக் கடன்பாட்டின் கீழான கடப்பாடு நிறை வேற்றப்படும் போது அல்லது இரத்துச் செய்யப்படும்போது அல்லது முடிவடையும் போது ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படுகிறது.

3.11 **நிதிக் கருவிகளை எதிரீடு செய்தல்**

ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கு தற்போது வினைப்படுத்தக்கூடிய சட்ட உரிமை நடப்பிலிருப்பதுடன் அதனை நிகர அடிப்படையில் தீர்க்கும் எண்ணமுமிருப்பின் அல்லது சொத்துக்களை விற்று அதே வேளையிலேயே கடன்பாடுகளைத் தீர்க்கும் எண்ணமிருப்பின் மாத்திரமே நிதிச் சொத்துக்களும் நிதிக் கடன்பாடுகளும் எதிரீடு செய்யப்பட்டு நிகர தொகை நிதி நிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும்.

3.12 **இளைப்பாறிய ஊழியர் பயன்கள்**

3.12.1 **வரையறுக்கப்பட்ட பயன்திட்டங்கள் கம்பனி**

தகவுள்ள சகல ஊழியர்கட்கும் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டக் கொடுப்பனவில் தேவைப்படுத்தப்பட்டவாறு சபை பயன் திட்டங்களை மேற்கொண்டது. பயன் திட்டத்திற்கு வெளியிலிருந்து நிதி கிடைப்பதில்லை.

ஊழியர்கட்கு ஒவ்வோராண்டு சேவைக்கும் ஒரு மாத கால சம்பளம் இளைப்பாற்றியின் போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட பயன்கள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி எதிர்வு கூறப்பட்ட அலகுவரை முறையை உபயோகித்து அறிக்கையிடும் திகதியில் நிதி நிலைக் கூற்றில் கடன்பாடு ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த உருப்படி நடப்பு கடன்பாட்டில் அல்லாத நிதி நிலைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயுட்கால இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை எழும் நிதியாண்டில் இதர முழுமையான வருமானத்தில் வருவாயாக அல்லது செலவாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

3.12.2 **வரையறை செய்யப்பட்ட பயன்சார் பங்களிப்புகள்**

ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் தகவுடைய சகல ஊழியர்களும் பொருத்தமான பங்களிப்பு நிதிகளில் பொருத்தமான நியதிச் சட்டங்கட்கேற்ப உட்பட்டவராவர். வரையறுக்கப்பட்ட பங்களிப்பு செய்யப்படும் போது இலாப நட்டத்தில் செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.13 **வணிகமும் இதர செலுத்த வேண்டியவைகளும்**

வணிகமும் இதர செலுத்த வேண்டியவைகளும் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.14 **ஏற்பாடுகள்**

பழைய நிகழ்வொன்றின் விளைவாக நம்பத்தகு விதத்தில் மதிப்பிடக் கூடிய தற்போதைய சட்டம் அல்லது ஆக்கபூர்வ கடப்பாடு சபைக்கிருப்பின், அதனால் கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதாரவியல் பயன்கள் வெளியேற்றம் சாத்தியமாகவிருக்குமிடத்து ஏற்பாடு ஒன்று ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.15 **குறைவாகப் பயன்படுத்தப்படும் இருப்புகட்கான ஏற்பாடு**

சபை அதன் கிரமமான மதிப்பீடுகளின் மூலம் சரக்குத் தொக்குகளில் சேதமிழப்பை அடையாளங் காணின் குறைவாகப் பயன்படுத்தப்படும் இருப்புகட்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

3.16 **முதலீட்டு ஈடுபாட்டுப் பொறுப்புகளும் நிகழ்தரி பரிப்பும்.**

பொருளியல் பயன்களின் மாற்றம் சாத்தியமாகாத விடத்து அல்லது நம்பத்தக்க விதத்தில் அளவீடு செய்ய முடியாதவிடத்து நிகழ்தகு பரிப்புகள் அவற்றின் மெய்மைநிலை சில எதிர்கால நிகழ்வுகளால் அல்லது நடப்பு கடப்பாடுகளால் மட்டுமே உறுதிப்படுத்தக்கூடிய கடப்பாடுகளாகும்.

**முழுமையான வருவாய்க் கூற்று**

3.17 **வருவாய்**

பயணிப் போக்குவரத்திலிருந்து வரும் வருவாய் சபை வருவாயை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

3.17.1 **வருவாய் ஏற்பிசைவு**

பொருளியல் பயன்கள் சபைக்கு கிட்டுவது சாத்தியம் எனவும் வருவாயும் அதனோடு இணைந்த ஏற்பட்ட அல்லது ஏற்படக்கூடிய செலவுகளும் நம்பத்தகு வகையில் அளவிடக்கூடிய அளவிற்கு வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. பெறப்பட்ட அல்லது வருமதியான பயனின் நிதி மதிப்புப் பெறுமதியில் வணிகக் கழிவுகளின் நிகரிலும், விற்பனை வரிகளிலும் சபையினுள் விற்பனையை நீக்கிய பின்னர் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

(அ) **பொருள்களின் விற்பனை**

சொத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் பயன்களும் பெரும்பாலான வேளைகளில் பொருள்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வாங்குநருக்கு கிட்டியதன் பின்னர் பொருள்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. மாறாத வட்டி விகிதத்தை உருவாக்கக் கூடியவாறு குத்தகைக் காலத்தில் ஒவ்வோர் காலவெல்லைக்கும் நிதிச் செலவுகள் பங்கிடப்படுகின்றன.

(ஆ) **சேவைகள் வழங்கல்**

சேவைகள் வழங்கப்படும் அல்லது செயலாற்றப்படும் காலத்திற்குரிய கணக்கீட்டுக் காலவெல்லையில் சேவைகள் வழங்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படும்.

(இ) **இதர வருவாய்**

கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கான சபையின் உரிமை தாபிக்கப்பட்டதும் பங்கிலாபங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றின் விற்பனையில் இருந்து கிடைக்கும் இலாபங்கள் அல்லது நட்டங்கள், விற்பனை வருமதிகள் சொத்துக்களின் முன் கொணரப்படும் பெறுமதி சார்புடைய செலவுகள் ஆகியவற்றைக் கழித்த பின்னர் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

வெளிநாட்டு நாணய ஆதாயங்களும் நட்டங்களும் நிகர் அடிப்படையில் அறிக்கையிடப்படுகின்றன.

கழிவுத் துண்டுகள் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருவாய் அனேகமாக பொருட்கள் ஒப்படைக்கப்பட்டதும் வாங்குநருக்கு பொருட்களின் சொத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் பயன்களும் அளிக்கப்படும் போது ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

முதலீட்டு ஆதனங்களின் தொழிற்பாட்டுக் குத்தகைகளிலிருந்து கிடைக்கும் வாடகை வருவாய் குத்தகை காலத்திற்கு நேர்கோட்டு முறையில் கணக்கிடப்படுகிறது.

3.18 **அரசாங்க கொடைகள்**

அரசாங்க கொடைகள் கிடைக்குமெனவும் அதற்கு இயைபுள்ள சகல நிபந்தனைகளும் நிறைவேற்றப்படும் எனவும் நியாயமான உறுதிப்படுத்தல் உள்ளவிடத்து அவை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கொடை செலவு உருப்படியுடன் தொடர்புடையதாயின் அக் கொடையை இழப்பீடு செய்யப்படும் செலவுகள் முறைவழியாக உரிய காலங்களுக்கு வருவாயாக ஏற்பிசைவு செய்யப்பட்டு செலவிடப்படுகிறது.

கொடை சொத்துடன் தொடர்புடையதாயின் தொடர்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் சம தொகைகளாக வருவாயாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

இ.போ.ச பணம் சாரா கொடைகள் பெறுமிடத்து சொத்தும் கொடையும் பெயரளவேயான தொகையில் பதியப்பட்டு எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட்காலத்தில் மேலிடாகத் தோற்றும் சொத்தின் பயன்களை நுகரும் மாதிரியுருவில் சம ஆண்டுத் தவணைக் கட்டணங்களாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு விடுவிக்கப்படுகிறது. கடன்கள் அல்லது அதையொத்த உதவி தொடர்புடைய அரசாங்கங்களால் அல்லது நிறுவகங்களால் பிரயோகமாகக் கூடிய நடப்பு சந்தை விகிதத்துடன் ஏற்பாடு செய்யப்படும் போது உசித வட்டியின் விளைபயன் அரசாங்க கொடையாக கருதப்படுகிறது.

## 3.19 செலவு ஏற்பிசைவு

### 3.19.1 தொழிற்பாட்டு செலவுகள்

ஓராண்டின் இலாபத்தை கணக்கிடும் போது வியாபாரத்தின் நாளாந்த செயற்பாட்டிற்கும், ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள் ஆகியவற்றை வினைத்திறமை நிலையில் வைத்திருப்பதற்கான பேணலுக்குமான செலவுகள் முழுமையான வருவாய்க் கூற்றுக்குச் சாட்டப்படுகிறது. நிதிச் சொத்துக்களின் சேதமிழப்பு, குறைவாகப் பயன்படுத்தும் இருப்புகள், நன்கு அறிந்த கடன்பாடுகள், ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கட்கான தேய்மானம் ஆகியவற்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 3.19.2 குத்தகைக் கொடுப்பனவுகள்

தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழான கொடுப்பனவுகள் குத்தகைக் காலத்தில் நேர்கோட்டு அப்படையில் இலாபமாக அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படுகிறது. நிதிச் செலவுகட்கும் நிலுவையிலுள்ள கடன்பாடுகள் குறைப்பிற்கும் இடையே ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகள் நிதிக் குத்தகைகளின் கீழ் பங்கிடப்படுகின்றன.

### 3.19.3 கடன்படு கிரயம்

உத்தேசிக்கப்படும் பாவனைக்கு அல்லது விற்பனைக்கு கணிசமான அளவு காலம் எடுக்குமெனக் கருதக் கூடிய சொத்துக்களின் சுவீகரிப்பு நிருமாணம் அல்லது உற்பத்தி ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடைய கடன் படுகிரயங்கள் அந்தவந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக முதலீடாக்கப்படுகிறது. இதர கடன்படு கிரயங்கள் யாவும் அவை நிகழ்கின்ற காலத்திற்கேற்ப செலவாகக் காட்டப்படுகிறது. கடன்படு கிரயத்தில் நிதி கடன்படுதலில் சபைக்கு ஏற்படும் இதர செலவுகளில் கடன்படு கிரயமும் வட்டியும் அடங்கும்.

### 3.19.4 தேசிய நிதி வருவாய் (செலவுகள்)

நிதிச் சொத்துக்களின் சீர்மதிப்பு பெறுமதியில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் மாற்றங்களும், முதலீட்டு நிதி மீதான வட்டி வருவாயும், பணியாளர் கடன்களும் நிதி வருவாயில் அடங்கும். விளைவு வட்டி முறையை உபயோகித்து வட்டி வருவாய் இலாபம் அல்லது நட்டம் ஊடாக படிப்படியாகப் பெருகும் போது ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

கடன்படு மீதான வட்டி செலவு, ஏற்பாடுகளின் மீதான கழிவுகளை கழற்றுதல், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர் மதிப்புப் பெறுமதியூடாக சீர் மதிப்பு பெறுமதியில் நிதிச் சொத்துக்களின் சீர் மதிப்பு பெறுமதியில் மாற்றங்கள், நிதிச் சொத்துக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேதமிழப்பு நட்டங்கள், தகைமை பெறும் சொத்தொன்றின்

சுவீகரிப்பு, நிருமாண வேலை அல்லது உற்பத்தி ஆகியவற்றுடன் நேரடியாக தொடர்பற்ற கடன்படு கிரயங்கள் ஆகிய நிதிச் செலவில் அடங்கும் விடயங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் விளைவு வட்டி முறையை உபயோகித்து ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

3.20 **உறவு முறை சார்ந்தோர் கொடுக்கல் வாங்கல்கள்**

உறவு முறை சார்ந்தோரிடையே ஒரு விலை விதிக்கப்பட்டதா இல்லையா என்பதைக் கருத்திற் கொள்ளாமல் ஒரு பகுதியினரின் மறு பகுதியினர்கள் நிதி, செயற்பாட்டு கொள்கைகள் தீர்மானங்களை கட்டுப்படுத்தி அல்லது குறிப்பிட்ட அளவில் செலவாக செலுத்திய கொடுக்கல் வாங்கல்கள் தொடரில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

3.21 **காசுப் பாய்ச்சல்**

நேரில் முறையை உபயோகித்து தயாரித்த காசுப்பாய்ச்சல்களின் கூற்று சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக செலுத்திய பங்கிலாபமும் வட்டியும், நிதியளிக்கும் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுவதுடன் பெற்றுக் கொண்ட வட்டியும், பங்கிலாபமும் நிதியளிக்கும் காசுப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படும்.

3.22 **அறிக்கையிடும் காலத்திற்குப் பின் ஏற்படும் நிகழ்வுகள்**

அறிக்கையிடும் காலத்தின் முடிவிற்கும் நிதிக் கூற்றுகள் வெளியிடப்படுவதற்கு அதிகார மளிக்கப்படும் உரிய திகதிக்குமிடையே ஏற்படும் சாதகமானவைகளும் பாதகமானவைகளுமான நிகழ்வுகளாகும்.

அறிக்கையிடும் காலத்தின் பின்னர், ஏற்படும் நிகழ்வுகளின் பொருண்மைத்தன்மை ஆராயப்பட்டு, தேவையான விடத்து, நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

*இலங்கை போக்குவரத்து சபை*

## 31.12.2021 இல் உள்ளவாறு நிதி நிலை அறிக்கை

| சொத்துகள் | குறிப்பு | | |
|---|---|---|---|
| **நடமுறையல்லா சொத்துகள்** | | **2021** | **2020** |
| காணி,கட்டிடம்,பொறி, உபகரணம் | 01 | 4,765,524,410.17 | 7,083,280,977.22 |
| ஏனைய நிதி சொத்துகள் | 02 | 21,468,750.00 | 26,906,250.00 |
| நடைபெறும் மூலதனம் | | 45,099,046.94 | 42,372,869.98 |
| செயற்படுத்தப்படாத கணக்குகள் | 03 | 1,290,782,781.62 | 1,290,782,781.62 |
| | | **6,122,874,988.73** | **8,443,342,878.82** |
| **நடமுறை சொத்துகள்** | | | |
| கையிருப்புகள் | 04 | 1,777,323,726.22 | 1,696,207,318.88 |
| ஏனைய பெறுவனவுகள் | 05 | 3,008,877,126.35 | 2,864,130,067.71 |
| வங்கி மீதிகள் | 06 | 346,363,269.52 | 1,131,363,974.06 |
| காசு மீதிகள் | 07 | 2,286,034,569.27 | 2,742,229,957.14 |
| **மொத்த நடைமுறை சொத்துகள்** | | **7,418,598,691.36** | **8,433,931,317.79** |
| **மொத்த சொத்துகள்** | | **13,541,473,680.09** | **16,877,274,196.61** |
| **உரிமையாண்மையும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| உரிமை மூலதனம் | | 350,000,000.00 | 350,000,000.00 |
| திரண்ட நட்டம் | 08 | (25,142,546,939.25) | (44,135,887,622.78) |
| திறைசேரி பங்கு மூலதனம் | | 3,944,890,550.00 | 3,944,890,550.00 |
| ஊழியர்களின் பங்கு | | 227,885,200.00 | 411,144,470.00 |
| அரச மாணியங்கள் | 09 | 283,702,406.07 | 3,300,557,519.78 |
| ஒதுக்கங்கள் | 10 | 10,524,757,941.77 | 5,470,757,941.77 |
| விற்பனை ஒதுக்கங்கள் | | 21,218,750.00 | 26,656,250.00 |
| **மொத்த உரிமையாண்மை** | | **(9,790,092,091.41)** | **(30,631,880,891.23)** |
| **நடமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 11 | 13,245,778,078.77 | 13,450,587,559.71 |
| ஏனைய நடமுறையல்லா பொறுப்புகள் | 12 | 3,068,771,293.82 | 3,860,454,904.02 |
| செயற்படுத்தப்படாத கணக்குகள் | 13 | - | 18,526,264,783.02 |
| | | **16,314,549,372.59** | **35,837,307,246.75** |
| **நடமுறை பொறுப்புகள்** | | | |
| ஏனைய கொடுபடவேண்டியவை | 14 | 6,954,592,938.75 | 11,524,081,084.92 |
| வங்கி மேலதிகப்பற்று | 07 | 62,423,460.16 | 147,766,756.17 |
| **மொத்த நடமுறை பொறுப்புகள்** | | **7,017,016,398.91** | **11,671,847,841.09** |
| **மொத்த உரிமையாண்மை, பொறுப்புகள்** | | **13,541,473,680.09** | **16,877,274,196.61** |

கணக்கீட்டு கொள்கைகளும் 1-21 வரையான குறிப்புகளும் நிதி கூற்றுகளின் ஒருங்கினைந்த பகுதியாகும். நிதி கூற்றுகளை தயாரித்து சமர்ப்பிப்பது இயக்குனர் சபையின் பொறுப்பாகும். இந்த நிதி கூற்றுகள் இயக்குனர் சபையினால் அங்கிகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பம் இடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **402-1-3-F** | வாழ்க்கை செலவு படி- பாதுகாப்பு ஊழியர்கள் | 60,881,797.00 | 58,606,646.49 |
| **402-1-3-G** | வாழ்க்கை செலவு படி- வினியோக ஊழியர்கள் | 26,232,919.11 | 28,685,918.63 |
| **402-1-3-H** | வாழ்க்கை செலவு படி- DTS ஊழியர்கள் | 1,935,650.00 | 1,719,011.11 |
| | மொத்தம் | **419,337,967.72** | **462,132,329.49** |

| *18.4* | போக்குவரத்து செலவு | 31.12.2021 | 31.12.2020 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **402-1-4-A** | போக்குவரத்து செலவு - செயலாற்று ஊழியர்கள் | 4,919,432.76 | 6,300,944.74 |
| **402-1-4-B** | போக்குவரத்து செலவு - கணக்கியல் ஊழியர்கள் | 642,169.60 | 1,042,739.25 |
| **402-1-4-C** | போக்குவரத்து செலவு -பொறியியல் ஊழியர்கள் | 1,358,485.50 | 1,600,792.19 |
| **402-1-4-D** | போக்குவரத்து செலவு -கணக்காய்வு ஊழியர்கள் | 680,744.50 | 922,778.50 |
| **402-1-4-E** | போக்குவரத்து செலவு -ஒழுக்காற்று ஊழியர்கள் | 413,600.00 | 558,522.50 |
| **402-1-4-F** | போக்குவரத்து செலவு -பாதுகாப்பு ஊழியர்கள் | 522,362.00 | 631,819.50 |
| **402-1-4-G** | போக்குவரத்து செலவு -வினியோக ஊழியர்கள் | 293,579.00 | 466,573.75 |
| **402-1-4-H** | போக்குவரத்து செலவு -DTS ஊழியர்கள் | 80,870.00 | 86,773.50 |
| | மொத்தம் | **8,911,243.36** | **11,610,943.93** |

| 18.5 | ஏனைய விசேட கொடுப்பனவுகள் | 31.12.2021 | 31.12.2020 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **402-1-5-A** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -செயலாற்று ஊழியர்கள் | 345,281,635.58 | 393,238,950.52 |
| **402-1-5-B** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -கணக்கியல் ஊழியர்கள் | 98,511,060.48 | 107,426,553.22 |
| **402-1-5-C** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -பொறியியல் ஊழியர்கள் | 95,892,636.96 | 102,894,857.75 |
| **402-1-5-D** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -கணக்காய்வு ஊழியர்கள் | 14,354,859.84 | 15,033,657.06 |
| **402-1-5-E** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -ஒழுக்காற்று ஊழியர்கள் | 17,197,501.01 | 17,259,380.24 |
| **402-1-5-F** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -பாதுகாப்பு ஊழியர்கள் | 52,540,767.91 | 66,946,526.99 |
| **402-1-5-G** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -வினியோக ஊழியர்கள் | 38,687,417.28 | 39,866,996.44 |
| **402-1-5-H** | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -DTS ஊழியர்கள் | 3,064,205.12 | 2,555,109.32 |
| | மொத்தம் | **665,530,084.18** | **745,222,031.54** |

| 18.6 | திருத்துதல் , பராமரித்தல் | 31.12.2021 | 31.12.2020 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **402-2-1** | திருத்துதல் , பராமரித்தல்- Garage Building | 50,847,627.20 | 36,200,859.64 |
| **402-2-2** | திருத்துதல் , பராமரித்தல்-தளபாடம்,காரியாலய உபகரணம் | 7,126,496.69 | 10,282,886.32 |
| **402-2-3** | திருத்துதல் , பராமரித்தல்-Pool Vehicle | 118,976,661.31 | 97,651,530.53 |
| **402-2-4** | திருத்துதல் , பராமரித்தல்- பொறி , இயந்கிரம் | 31,489,172.00 | 27,924,512.17 |
| | மொத்தம் | **208,439,957.20** | **172,059,788.66** |

| 18.7 | தேய்மானம் | 31.12.2021 | 31.12.2020 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 402-3-2 | தேய்மானம் - ஏனைய வாகனங்கள் | 8,569,267.50 | 11,630,339.50 |
| 402-3-3 | தேய்மானம் -பொறி , இயந்திரம் | 52,566,107.44 | 38,550,745.47 |
| 402-3-4 | தேய்மானம் -தளபாடம் , காரியாலய உபகரணம் | 8,505,312.74 | 8,140,277.42 |
| 402-3-5 | தேய்மானம் -கட்டிடம் | 1,960,819.32 | 1,569,663.85 |
| 402-3-6 | தேய்மானம் -கணனி | 25,401,245.33 | 26,133,711.61 |
| 402-3-7 | தேய்மானம் -ஏனையவை | 5,590,966.61 | 6,258,085.71 |
| 402-3-9 | தேய்மானம் -குளிரூட்டிகள் | 1,161,239.63 | 1,144,194.71 |
| 402-3-10 | தேய்மானம் -பஸ் இயந்திரம் | 226,338,436.05 | 226,338,436.05 |
| 402-3-12 | தேய்மானம் - பற்றுச்சீட்டு இயந்திரம் | 27,789,778.30 | 39,098,386.57 |
| 402-3-13 | தேய்மானம் - கணனி மென்பொருள் | 6,021,374.32 | 5,232,527.41 |
| | மொத்தம் | **363,904,547.24** | **364,096,368.30** |

## 19 நிதி செயற்பாடு

| கணக்கு குறியீடு | விபரம் | 31.12.2021 ரூபா | 31.12.2020 ரூபா |
|---|---|---|---|
| **402-4-1** | வங்கி மேலதிக பற்று | 382,052.96 | 1,010,005.95 |
| **402-4-2** | வங்கி கட்டனம் | 6,701,571.17 | 5,813,691.27 |
| **402-4-4** | குத்தகை வட்டி | 211,700,389.80 | 213,760,343.00 |
| **402-4-5** | ஏனையவை | - | 43,671,235.74 |
| | மொத்தம் | **218,784,013.93** | **264,255,275.96** |

| கணக்கு குறியீடு | விபரம் | 31.12.2021 ரூபா | 31.12.2020 ரூபா |
|---|---|---|---|
| 303-7 | வட்டி வருமானம் | 144,232,252.97 | 184,884,183.17 |
| | மொத்தம் | **144,232,252.97** | **184,884,183.17** |

| | | | |
|---|---|---|---|
| | தேறிய நிதி செலவுகள் | **74,551,760.96** | **79,371,092.79** |

## 20 வேலைத்தள உற்பத்தி இலாபம் /நட்டம்

| | இலாப/நட்ட கூற்று | | 31.12.2021<br>ரூபா | | 31.12.2020<br>ரூபா |
|---|---|---|---|---|---|
| **403-1** | நடைபெறும் வேலை - 01.01.2021 | 11,392,281.74 | | 1,509,513.37 | |
| | கூட்டுக | | | | |
| **403-2** | மூலப்பொருட்கள் கொள்வனவு | 110,046,718.50 | | 159,820,527.87 | |
| | கழிக்குக | | 121,439,000.24 | | 161,330,041.24 |
| **403-4** | பொருள் திரும்பல் | (142,452.99) | | 627,301.56 | |
| | நடைபெறும் வேலை - 31.12 2021 | 4,729,152.18 | | 11,392,281.74 | |
| | | | 4,586,699.19 | | 12,019,583.30 |
| | முடிவுப் பொருட்களின் ஆரம்ப செலவு | | 116,852,301.05 | | 149,310,457.94 |
| | **தொழிற்சாலை கிரயம்** | | | | |
| **403-1-A** | தொழிற்சாலைக் கூலி | 115,969,025.30 | | 125,638,580.76 | |
| **403-1-B** | மேலதிக நேரக் கொடுப்பனவு | 17,975,221.78 | | 21,898,747.06 | |
| **403-1-C** | போக்குவரத்து கொடுப்பனவு | 27,375.00 | | 73,607.50 | |
| **403-1-D** | ஊ.சே.நிதி | 11,595,436.09 | | 12,775,587.35 | |
| **403-1-E** | ஊ.ந.நிதி | 2,026,698.34 | | 2,226,177.86 | |
| **403-1-F** | ஏனைய செலவுகள் | 71,143.60 | | 4,200.00 | |
| | தொழிற்சாலை கிரயம் | | 147,664,900.11 | | 162,616,900.53 |
| | மொத்த உற்பத்தி செலவு | | 264,517,201.16 | | 311,927,358.47 |
| 403-3 | உற்பத்தி வருமானம் | 207,876,565.40 | 207,876,565.40 | 236,690,485.97 | 236,690,485.97 |
| | உற்பத்தி குறைவு | | (56,640,635.76) | | (75,236,872.50) |
| | ஏனைய வேலைத்தள உற்பத்தி | | 19,985,333.18 | | 8,999,628.71 |
| | உற்பத்தி குறைவு | | **(36,655,302.58)** | | **(66,237,243.79)** |

**21 சாரதி பயிற்சி பாடசாலை இலாபம் / நட்டம்**

| | இலாப/நட்ட கூற்று | | 31.12.2021<br>ரூபா |
|---|---|---|---|
| | **பயிற்சி வருமானம்** | 8,000,020.20 | |
| | | | 8,000,020.20 |
| 303 | ஏனைய வருமானம் | | |
| 303-7 | வட்டி வருமானம் | 2,893,684.71 | |
| 303-12 | ஆதனத்தில் வருமானம் | 3,250.00 | |
| 303-24 | ஏனைய வருமானம் | 56,200.00 | |
| | | | 2,953,134.71 |
| | மொத்தம் | | 10,953,154.91 |
| 4 | **செலவுகள்** | | |
| 401 | **பஸ் இயக்கும் செலவுகள்** | | |
| 401-1-6 | சாரதி நடத்துனர் போக்குவரத்து படி | 962.50 | |
| 401-1-18 | பொறியியல் போக்குவரத்து படி | 5,862.50 | |
| | | | 6,825.00 |
| 401-2-B | எரிபொருட்கள் | 565,028.00 | |
| | | | 565,028.00 |
| 401-3 | **ஏனைய நேரடி செலவு** | | |
| 401-3-1 | உதிரி பாகங்கள் | 6,635.00 | |
| 401-3-4 | பட்டறி | 3,000.00 | |
| 401-3-5 | பஸ் திருத்துதல் செலவுகள் | 371,538.15 | |
| 401-3-7 | பஸ் பதிவு கட்டணங்கள் | 41,785.00 | |
| | | | 422,958.15 |
| 402 | செலவுகள் | | |
| 402-1 | ஊழியர் செலவுகள் | | |
| 402-1-1-H | சம்பளம் | 14,394,980.62 | |
| 402-1-2-H | மேலதிக நேரம், விடுமுறை கொடுப்பனவு | 3,241,603.59 | |
| 402-1-3-H | வாழ்க்கை செலவு படி | 4,453,372.47 | |
| 402-1-4-A | போக்குவரத்து செலவு - செயலாற்று ஊழியர்கள் | 2,895.00 | |
| 402-1-4-H | போக்குவரத்து செலவு -DTS | 14,190.00 | |
| 402-1-5-H | ஏனைய விசேட கொடுப்பனவுகள் -DTS | 6,924,039.22 | |
| 402-1-9 | வைத்திய செலவுகள் | 21,155.00 | |
| 402-1-11 | ஒப்பந்த,நாளாந்த ஊழியர் கொடுப்பனவுகள் | 19,915.00 | |
| 402-1-12 | ஊழியர் சேமலாப நிதி | 2,719,586.20 | |
| 402-1-13 | ஊழியர் நம்பிக்கை நிதி | 651,357.33 | |
| | | | 32,443,094.43 |
| 402-2 | நிர்வாகச் செலவுகள் | | |
| 402-2-1 | திருத்துதல் , பராமரித்தல்- Garage Building | 198,485.00 | |
| 402-2-2 | திருத்துதல் , பராமரித்தல்-தளபாடம்,காரியாலய உபகரணம் | 26,040.00 | |
| 402-2-3 | திருத்துதல் , பராமரித்தல்-Pool Vehicle | 96,140.00 | |
| 402-2-4 | திருத்துதல் , பராமரித்தல்- பொறி , இயந்திரம் | 50,285.00 | |
| 402-2-5 | அச்சிடல் காகிதாதிகள் | 226,794.50 | |
| 402-2-6 | வாடகை ,வரி | 28,618.40 | |
| 402-2-7 | தொலைபேசி | 246,197.91 | |

| | | | |
|---|---|---|---|
| 402-2-8 | மின்சாரம் | 241,033.85 | |
| 402-2-9 | நீர் | 110,454.33 | |
| 402-2-10 | வருடாந்த மிகையூதியம் | 292,400.00 | |
| 402-2-11 | பணிக்கொடை | 4,426,197.75 | |
| 402-2-14 | ஊழியர் நலன்புரி | 333,386.00 | |
| 402-2-15 | தண்னனி கொடுப்பனவு | 25,000.00 | |
| 402-2-19 | எரிபொருள் | 863,515.26 | |
| 402-2-20 | களியாட்ட செலவுகள் | 28,594.00 | |
| 402-2-21 | ஏனைய செலவுகள் | 1,850,917.63 | |
| 402-2-24 | காப்புறுதி - ஏனைய வாகனங்கள் | 351,752.19 | |
| | | | 9,395,811.82 |
| 402-4 | நிதி செலவுகள் | | |
| 402-4-2 | வங்கி கட்டனம் | 9,820.00 | |
| | | | 9,820.00 |
| | மொத்த செலவு | | 42,843,537.40 |
| | தேறிய இலாபம் | | (31,890,382.49) |
| | **ஏனைய சாரதி பயிற்சி பாடசாலை இலாபம் / நட்டம்** | | 23,130,338.81 |
| | மொத்தம் | | (8,760,043.68) |

22 *எரிபொருள் நிலையங்கள்*

| | இலாப/நட்ட கூற்று | | | 31.12.2021<br>ரூபா |
|---|---|---|---|---|
| | விற்பனை | | | 188,333,635.85 |
| | ஆரம்ப மீதி - Diesel | 1,655,944.16 | | |
| | ஆரம்ப மீதி - Petrol | 220,267.23 | | |
| | ஆரம்ப மீதி- Lubricant | 303,860.00 | | |
| | | | 2,180,071.39 | |
| | கூட்டுக | | | |
| | கொள்வனவு-Diesel | 116,654,880.19 | | |
| | கொள்வனவு - Petrol | 68,231,468.56 | | |
| | கொள்வனவு -Lubricant | 673,718.57 | | |
| | | | 185,560,067.32 | |
| | | | 187,740,138.71 | |
| | இறுதி மீதி - Diesel | 2,123,191.84 | | |
| | இறுதி மீதி - Petrol | 1,363,597.38 | | |
| | இறுதி மீதி- Lubricant | 294,485.00 | | |
| | | | (3,781,274.22) | |
| | | | | (183,958,864.49) |
| | மொத்த இலாபம் | | | 4,374,771.36 |
| | ஏனைய வருமானம் | | | |
| 303-7 | வட்டி வருமானம் | 42,500.00 | | |
| 303-24 | Other Income a/c | 13,500.00 | | |
| | | | 56,000.00 | 56,000.00 |
| | | | | 4,430,771.36 |
| | <u>நிர்வாகச் செலவுகள்</u> | | | |
| 402-1-1-C | சம்பளம் - பொறியியல் ஊழியர்கள் | 1,908,195.28 | | |
| 402-1-2-C | மேலதிக நேரம், விடுமுறை கொடுப்பனவு பொறியியல் ஊழ | 569,897.61 | | |
| 402-1-3-C | வாழ்க்கை செலவு படி-பொறியியல் ஊழியர்கள் | 748,800.00 | | |
| 402-1-5-C | ஏனைய விசேட கொடுப்பனவுகள் பொறியியல் ஊழியர்கள் | 912,383.65 | | |
| 402-2-1 | திருத்துதல் , பராமரித்தல்- Garage Building | 934,278.00 | | |
| 402-2-2 | திருத்துதல் , பராமரித்தல்-தளபாடம்,காரியாலய உபகரணம் | 1,620.00 | | |
| 402-2-4 | பராமரித்தல்-பொறி, உபகரணம் | 71,748.80 | | |
| 402-2-5 | அச்சிடல் காகிதாதிகள் | 13,366.60 | | |
| 402-2-6 | வாடகை ,வரி | 176,022.98 | | |
| 402-2-7 | தொலைபேசி | 94,598.23 | | |
| 402-2-8 | மின்சாரம் | 273,204.94 | | |
| 402-2-14 | ஊழியர் நலன்புரி | 17,980.00 | | |
| 402-2-21 | ஏனைய செலவுகள் | 3,000.00 | | |
| | | | 5,725,096.09 | |
| | <u>நிதி செலவுகள்</u> | | | |
| 402-4-2 | வங்கி கட்டனம் | 7,548.60 | | |
| 402-4-5 | Other Finance Cost a/c | - | 7,548.60 | |
| | | | 5,732,644.69 | |
| | மொத்த செலவு | | | (5,732,644.69) |
| | தேறிய இலாபம் | | | (1,301,873.33) |

23 அரச பங்களிப்பு

| கணக்கு குறியீடு | விபரம் | 31.12.2021<br>ரூபா | 31.12.2020<br>ரூபா |
|---|---|---|---|
| 302-2-B | புனரமைப்புக்கான உதவிகள் | 1,181,217,237.00 | 1,091,904,937.00 |
| 302-6-F | Government Grant Amotized for The Year | 35,462,800.76 | 35,462,800.76 |
| | மொத்தம் | **1,216,680,037.76** | **1,127,367,737.76** |

<u>**வழிபட்டியல் வருமானம்   2014 - 2021**</u>






# <u>மொத்த வருமானம்,மொத்த செலவு 2014 - 2021</u>






**மொத்த வருமானம்,மொத்த செலவு , தேறிய இலாபம்/ நட்டம் 2014 - 2021**



சீடீபீ/ஏ/எஸ்எல்ரீபீ/எவ்ஏ/01/2021/150 2022 நவம்பர்30ஆந் திகதி

தலைவர்,
இலங்கை போக்குவரத்துச் சபை

**இலங்கை போக்குவரத்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை போக்குவரத்துச் சபையின் (“சபை”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில சமர்ப்பிக்கப்படும்.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-------------------------------------------------------------------

(அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 34,926,971 பெறுமதியான கணினி மென்பொருள், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 38 இன் 72 ஆம் பிரிவின் பிரகாரம் கட்புலச் சொத்தொன்றாக கணக்கு வைக்கப்படாது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டின் பிரகாரம், இராணுவ பயண அனுமதிப்பத்திர வருமானம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 147,095,230 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 142,858,305 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணமத்தால் மீளாய்வாண்டின் நட்டமானது அந்த அளவினால் அதிகரித்திருந்தது.

(இ) சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிராததுடன், மீளாய்வாண்டினுள் காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கினுள் உருப்படி எதுவென்று இனங்காணப்படாத ரூபா 48,168,750 தொகையான 04 உருப்படிகள் உள்ளடங்கியிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம், சபைக்கு சொந்தமான ரூபா 391,317,296 காணி மற்றும் கட்டிட மீதி தனித்தனியாக காணி மற்றும் கட்டிடமாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன், கட்டிடப் பெறுமானத் தேய்வுகளுக்குரிய சொத்துக்கள் தொடர்பான தகவல்களும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிராத காரணத்தால், காணி மற்றும் கட்டிட மீதியின் மற்றும் கட்டிடப் பெறுமானத் தேய்வின் பெறுமதியின் சரியான தன்மை மற்றும் சொத்துக்களின் நிலவுகை தொடர்பில் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(உ) சபைக்கு சொந்தமான கிரயம் இனங்காணப்படாத காணியொன்ற ரூபா 5,054,000,000 ஆன மதிப்பீட்டு பெறுமதிக்கு அரச நிறுவனமொன்றுக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அதற்குரிய கிரயம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியிலிருந்து அகற்றப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த ரூபா 4,954,000,000 தொகை மற்றும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டியதாக காணப்பட்ட ரூபா 100,000,000 ஆன தொகை ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டினுள் கணினி மற்றும் டிக்கட் மெஷின் இயந்திரம் ரூபா 6,470,984 தொகை அதிகரித்து பெறுமானத்தேய்விடப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக ஆண்டுக்கான நட்டம் அந்த அளவினால் அதிகரித்திருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கணினி மென்பொருளாக ரூபா 16,470,521 தொகை மற்றும் மோட்டார் வாகனமாக ரூபா 65,667,616 கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த சொத்துக்கள் தொடர்பிலான கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையால் குறித்த மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் சான்றுபடுத்த முடியாதிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டினுள் சொத்துக்களை கொள்வனவு செய்த காரணத்தால் ஏற்பட்ட காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 36,167,950 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதனுள் கடனுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 02 பேரூந்துகளின் ரூபா 8,400,000 ஆன தொகை உள்ளடங்கியிருந்தது. அதற்கமைய முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசு வெளிப்பாய்ச்சல் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டுக்காக வருமானக் கூற்றில் ஏனைய வருமானங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,192,994 பெறுமதியான இருப்பு சீராக்கல் கணக்கின் மீதி மற்றம் ரூபா 8,786,886 தொகையான எரிபொருள் இருப்பு மிகை அல்லது பற்றாக்குறை கணக்கின் மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2001 ஆம் ஆண்டின் போது பேரூந்தின் என்ஜின் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 2,981,392,313 ஆன நிதியேற்பாடு சொத்துக்களின் ஆயுட்காலத்தின் பிரகாரம் வருடாந்தம் காலக்கழிவு செய்யப்படாது மீளாய்வாண்டின் போது மொத்த மீதியும் திரண்ட நிதியத்திற்க சீராக்கப்பட்டமையால் திரண்ட நட்டமானது அந்த அளவினால் குறைவடைந்திருந்ததுடன், சபையின் மறைப் பெறுமதியுடனான தேறிய சொத்துக்கள் அந்த அளவினால் குறைவடைந்திருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் வங்கிக் கட்டண செலவினம் ரூபா 6,701,571 ஆக இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதனுள் ரூபா 711,616 ஆன வங்கி மேலதிகப்பற்று வட்டியும், ரூபா 307,664 தொகையான ஒப்பந்த படிகளும், ரூபா 1,630,963 தொகையான ஊழியர் கடன் அறவீடுகளும், ரூபா 11,273

தொகையான சிங்கள புதுவருட விழாவிற்கான கடன் தவணை அறவீடுகளும் உள்ளடங்கியிருந்தது.

(ஔ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,790,092,091 ஆன மறைப் பெறுமதியொன்றான காரணத்தால் சபையின் தொடர்ந்தியங்கும் நிலை தொடர்பில் அது பாதகமான முறையில் தாக்கமளிக்கக்கூடும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(க) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 1,290,782,781 பெறுமதியான செயலற்ற வரவு கணக்கு மீதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு விரிவான பட்டோலையொன்று கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாத காரணத்தால், அந்த மீதிகளின் சரியானதன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(கா) 2022 மே 09 ஆந் திகதி நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சபைக்கு சொந்தமான ரூபா 7,300,000 கிரயமான 3 வாகனங்கள் மற்றும் 12 டிப்போக்களுக்குரிய ரூபா 76,749,438 கிரயமான 18 பேரூந்துகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கி) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 20,666,494 தொகையான வியாபார கடன் பட்டோர் மீதியினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,745,604 தொகையும், 02 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 2,413,953 தொகையான கடன் மீதியும் உள்ளடங்கியிருந்த போதிலும், அதற்குரிய ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மேற்படி மீதிக்கமைய மீதி உறுதிப்படுத்தல்களும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாத காரணத்தால் குறித்த மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(கீ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,833,830,765 தொகையான வியாபாரக் கடன் கொடுத்தோர் மீதியினுள் 10 வருடத்தை விஞ்சிய வியாபாரக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 576,577,491 தொகையும், 05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன் கொடுத்தோர் மீதி ரூபா 432,275,302 தொகையும், 02 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன் கொடுத்தோர் மீதி ரூபா 513,266,201 தொகையும், காணப்பட்டதுடன், குறித்த

மீகிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்களும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை. மேலும், 10 கடன் கொடுத்தோர் மீதிகளுக்குரிய ரூபா 90,420,175 ஆன வரவு மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

(கு) சபையின் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், வருடாந் உதிரிப்பாகங்களின் பௌதீக இருப்பு மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 1,514,815,227 ஆக காணப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இருப்பு ரூபா 1,637,684,553 ஆகும். அதற்கமைய நிதி நிலைமைக்கூற்றில் இருப்பின் பெறுமதி ரூபா 122,869,326 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கூ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்நாட்டிலான கொள்வனவு முற்பணக் கணக்கில் ரூபா 1,468,624,856 ஆன மீதியொன்று நிலவியதுடன், அதற்கான பட்டோலைகள் வழங்கப்படாத காரணாத்தால் அதன் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன், அவற்றுள் ரூபா 1,467,253,615 ஆன மீதியொன்று 02 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

(கெ) சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 337,171,886 ஆக காணப்பட்டது. எனினும், ரூபா 111,556,382 தொகையான நிலையான வைப்பிற்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாத காரணத்தால் குறித்த மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு, நிதி நிலைமைக்கூற்றில், விரிவான வருமானக்கூற்றில், உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருண்மையான உருப்படிகளை மாற்று வழிகளின் மூலம் சான்றுபடுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வுக்குட்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் பெறுமதி அல்லது உருப்படிகளின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏதேனும் சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் இயலாதிருந்தது.

**02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்கு அத்தியாவசியமானது என கருதப்படும் அனைத்து தகவல்களும் மற்றும் தெளிவுடுத்தல்களும் எனக்கு கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், சபையினால் உரிய கணக்குப் பதிவுகள் பேணப்படுகின்றதா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையின் (அ), (ஆ) அவதானிப்புகள் நீங்காலாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.

| | சட்டங்கள், விதிகளுக்கான / கட்டளைகளுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 28 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரம் | வாகனங்களை சேவைப்படுத்துதல் தொடர்பில் அனைத்து டிப்போக்களினாலும் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையின் எந்த டிப்போவிலும் அந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.. |
| (ஆ) | பீஈடீ 2/2015 மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது சபையினால் அதன் உத்தியோகத்தர்களுக்காக கைத்தொலைபேசி வசதிகளை வழங்குவதற்காக ரூபா 7,729,446 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தினுள் சபைக்கு சொந்தமான இணைப்புகள் 1078 ஆன போதிலும், 831 இணைப்புகள் தொடர்பான தகவல்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. 59 இணைப்புகயை பயன்படுத்துவது யார் என்பது தொடர்பில் உறுதிப்படுத்த முடியாதிருந்த போதிலும், அந்த இணைப்புகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) | அரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| i. | நி.பி.387 | வங்கி மேலதிகப்பற்று வசதிகளை பெற்றுக்கொள்ள கூடாததுடன், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக சபையினால் ரூபா 62,423,460 பெறுமதியான வங்கி மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக ஆண்டினுள் ரூபா 382,052 ஆன வட்டி செலுத்தப்பட்டிருந்தது. |
| ii. | நி.பி.395(இ) | 05 பிரதேச அலுவலகங்கள், 04 பிரதேச வேலைத்தளங்கள், 03 டிப்போக்கள், 02 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தினால் பேணப்படும் 19 வங்கிகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதி மாதத்திற்கான வங்கி இணக்கக்கூற்று கணக்காய்வுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த கணக்குகளுக்கு உரிய மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் திசெம்பர் மாத வங்கி கணக்குகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | iii. | நி.பி.395(ஈ) | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் காசாக்கப்படாத காசோலைகளின் பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம், வழங்கிய போதிலும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 17,577,369 தொகைக்குரிய காசோலைகள் தொடர்பில் பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | iv. | நி.பி.396 | 6 மாதங்களுக்கு மேற்பட்ட வழங்கப்பட்ட போதிலும், கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூா 2,977,706 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | |
| | (i) | 5.1.2 ஆம் பிரிவு | நோக்கம் மற்றும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சபை அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) | 5.2 ஆம் பந்தி | செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கூற்று, பாதிடப்பட்ட ஐந்தொகை, பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பாதிடப்பட்ட மூலதனச் செலவினங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபை அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) | 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் வருடம் நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 127 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2022 யூலை 04 ஆந் |

| | | |
|---|---|---|
| | | திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (iv) | 8.3.9 ஆம் பந்தி | சுற்றறிக்கையின பிரகாரம் அரச முயற்சிகளின் வளங்கள் வரிசை அமைச்சிற்கு வழங்கப்படக்கூடாத போதிலும், சபையின் 11 உத்தியோகத்தர்கள் போக்குவரத்து அமைச்சில் கடமைகளை நிறைவேற்றியிருந்ததுடன், சபையினால் அவர்களுக்காக சம்பளம் மற்றும் மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றை மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | தாபனவிதிக் கோவையின் **VIII** ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | மேலதிக நேரப் படிகளுக்காக பணம் செலவிடப்படுவது குறித்த பணியை நிறைவேற்ற வேறு எந்த வழியும் இல்லாத வேறு விசேடமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் மற்றும் திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்ட போதிலும், பொதுவான கடமைகளிலிருந்து முற்றிலும் விலகிய, அவசரமானதும், பொதுவான நேரத்தில் மேற்கொள்ள முடியாத பணிகளுக்கு மாத்திரமான போதிலும், சபையின் ஊழியர்களுக்கு வரையறையின்றி மேலதிக நேரப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. சபையின் தலைமை அலுவலகத்தில் சம்பளம் பெறும் 708 உத்தியோகத்தர்கள் கடமைகளை நிறைவேற்றியுள்ளமை அவதானிக்கப்படுவதுடன், மேற்கொள்ளப்பட்டுள்ள மாதிரிப் பரிசோதனைகளில் மீளாய்வாண்டினுள் சபையின் 177 உத்தியோகத்தர்களுக்காக மாதாந்த சம்பளத்தினை விஞ்சி ரூபா 12,573,754 ஆன தொகை மேலதிக நேரப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) சபை 2018 மார்ச் 20 ஆந் திகதி ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 61,014,316 பெறுமதிக்கு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாண நடவடிக்கைகள் 2018 யூன் 20 ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையிலும் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராததுடன், 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக ஒப்பந்ததாரருக்கு ரூபா 26,765,705 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக விலையில் குறைந்த விலைக் கேள்விகளை கருத்திற்கொள்ளாது, ஆகக் கூடிய விலைக்கேள்வியாளருக்கு விலைக்கேள்வி கையளிக்கப்பட்டமையால் சபைக்கு ரூபா 2,102,126 ஆன நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்ததாரர் உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்களை நிறைவு செய்யாத காரணத்தால் சபைக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை நடாத்துவதால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக காணப்பட்ட வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பத்தில் ரூபா 12,610,500 பெறுமதியான 07 டீசல் மற்றும் பெற்றோல் பம்பிகள் அந்த வளாகத்தில் எதுவித பாதுகாப்பும் இல்லாது குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன், வைப்பு செய்யப்பட்டிருந்த எரிபொருள் தாங்கிகளின் மூடிகள் ஒப்பந்ததாரரினால் அகற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. எனினும், அது தொடர்பில் இது வரையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 09 மாகாணங்களில் 09 கழிவுப் புகை பரிசோதனை நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உரிய உபகரணத் தொகுதிகள் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் வாகனக் கழிவுப் புகை பரீட்சிப்பு நம்பிக்கைப் பொறுப்பு சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன், கழிவுப் புகை பரீட்சிப்பு நிலையங்களை நிர்மாணித்தல் சாத்தியவளக் கற்கையொான்றினை மேற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கழிவுப் புகை பரீட்சிப்பு நிலையங்களிடையே குருநாகலை மற்றும் மதவாச்சி நிலையங்களின் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், சட்டச் சிக்கலொன்றின் காரணமாக குறித்த நிலையங்கள் மூடப்பட்டிருந்த காரணத்தால் இந்த நிலையங்களில் காணப்படும் பெறுமதி ரூபா 18.75 மில்லியனான இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்படுவதாகவும், இந்த சொத்துக்களை பயன்படுத்துவதுடன் தொடர்புடைய சிவில் பணிகளை நிர்மாணிப்பதுடன் தொடர்புடைய ரூபா 89.84 மில்லியனான மதிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 22.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன்,

2022 மே 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்ட 03 நிலையங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(இ) சபையின் 125 அதிசொகுசு பேரூந்துகளுக்காக கெமராக்கள் மற்றும் ஜீ.பீ.எஸ் (GPS) கட்டமைப்பினை பேணுவதற்காக அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தனியர் கம்பனியொன்றுடன் ரூபா 33,628,840 ஆன உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை மேற்கொள்ள முன்னர் அடிப்படை சாத்தியவளக் கற்கையொன்று, கிரய நலன் பகுப்பாய்வொன்று மற்றும் பெறுபேற்றினை எதிர்வுகூறும் விதம் தொடர்பில் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்குரிய பெறுகைகள் உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 3,362,884 வழங்குநர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 ஏனைய விடயங்கள்

-----------------------------------

(அ) சபைக்கு சொந்தமான ரூபா 226,417,397 பெறுமதியான 10,575 டிக்கட் மெஷின்கள் காணப்படுவதுடன், அவற்றுள் ரூபா 107,070,821 பெறுமதியான 4,250 மெஷிகள் அல்லது 40 சதவீதமானவை செயலிழந்து காணப்பட்டது. எனினும், சபை இந்த மெஷின்களை பழுதுபார்தது பயன்படுத்தும் நிலைக்கு உள்ளாகியிருக்கவில்லை. இந்த மெஷின்களிடையே 493 மெஷின்கள் பழுதுபார்த்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததுடன், பழுதுபார்த்தல் பணிகள் விரைவாக நிறைவு செய்யப்பட்டிராததுடன், ரூபா 432,305 தொகையான 23 மெஷின்கள் காணாமற்போயிருந்தன.

(ஆ) Park & Ride செயற்திட்டத்தின் கீழ் ஒட்டத்தில் ஈடுபடுத்த இலக்கிடப்பட்ட பேரூந்துகளின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தின் 25 பேரூந்துகளும், கண்டி மாவட்டத்தின் 06 பேரூந்துகளும் காணப்பட்டன. இது தொடர்பில் ஓட்டம் மற்றும் வருமானம் தொடர்பிலான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், Park & Ride செயற்திட்டத்திற்காக 25 GPS இயந்திரங்கள் வெளிவாரி தர்ப்பினருக்கு சொந்தமான பேரூந்துகளில் பொருத்துவதற்காக சபையினால் ரூபா 939,750 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், இந்த பேரூந்துக்கள் தற்போது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. மேலும், இந்த பேரூந்துகளுக்கு பொருத்தப்பட்ட கெமராக்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயன்முன்னேற்றத்தினை பரீட்சிக்கும் போது இந்திய கடன் வசதியின் கீழ் 600 பேரூந்துக்கள் பேரூந்து குழாத்தில் சேர்ப்பதற்கு ரூபா 3,506 மில்லியன் மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 05 வருடங்களினுள் இந்த 600 பேரூந்துகளுக்காக பெறுகை நடைமுறை நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், பேரூந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான பிரதேச செயலகங்கள், டிப்போக்கள், சாரதி பயிற்சிப் பாடசாலைகள் மமற்றும் பிராந்திய வேலைத்தளங்கள் நடாத்தப்படுவதுடன், அவை நாடெங்கிலும் பல்வேறு பிரதேசங்களில் நிறுவப்பட்டிருந்தன. அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள காணிகள் தொடர்பீல் சட்டரீதியான உரித்துடைய, குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணிகள், சாட்டுதல் அல்லது வேறு முறையினூடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் தொடர்பிலுமான சபையினால் நாளதுவரையாக்கப்பட்ட காணிகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்படவில்லை. சபைக்கு சொந்தமான அனைத்த காணிகளையும் இனங்காணல், உரித்தினை தீர்ப்பனவு செய்தல் மற்றும் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்தல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மெலும், சபைக்கு சொந்தமான பயன்பாட்டிலுள்ள காணிகள் பாதுகாப்பற்ற முறையில் புற்கள் அடர்ந்து காணப்பட்டன.

(உ) 2022 யூன் 16 ஆந் திகதியளவில் கம்பனியின் நாளாந்த பேரூந்து தேவைப்பாடு 7,339 ஆக காணப்பட்டதுடன், தற்போதுள்ள பேரூந்து குழாம் 6,951 பேரூந்துக்களை கொண்டுள்ளது. அஅவற்றுள் 32 சதவீதமானவை ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாதிருந்தது. ஓட்டத்தில் ஈடுபடும் 4,718 பேரூந்துக்களில் 2,742 பேரூந்துக்கள் 10 வருடங்களை விட பழமையான பேரூந்துகள் ஆகும்.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காசு மற்றும் காசுக்கு சமனான சொத்துக்கள் கணக்கின் மீதி 961.4 மில்லியனான கையிருப்பிலுள்ள மீதி ரூபா 158.1 மில்லியனாக காணப்பட்டதுடன், 10 பிரதேசங்களின் வங்கி மேலதிகப்பற்று மீதிகள் ரூபா 62.4 மில்லியன் நிலவியது. இதன் அடிப்படையில் சபையின் நிதி முகாமைத்துவம் விளைவற்றதாக மேற்கொள்ளப்படுகின்றமை இதன் மூலம் அவதானிக்கப்பட்டது.

(எ) சபையின் தொழில்நுட்ப வேலைத்தளங்கள், சாரதிப் பாடசாலைகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்ச்சியாக 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நட்டத்துடன் இயங்கியிருந்ததுடன், அவற்றை இலாபமீட்டும் நிலைக்கு உள்ளாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலையான சொத்துக்கள் பட்டோலையின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி சபைக்கு சொந்தமான புத்தகப் பெறுமதி ரூபா 1,000 ஆன 825 பேரூந்து என்ஜின்கள் மீளாய்வாண்டினுள் சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. எனினும், அவற்றின் உயர் பெறுமதியுடான கழிவுப் பெறுமதி காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) வவுனியா டிப்போவின் நிலையான வைப்பினை மீள எடுத்து ரூபா 25,000,000 ஆன தொகை கடன் அடிப்படையில் தலைமை அலுவலகத்திற்க வழங்கப்பட்டிருந்தது. தலைமை அலுவலகம் 10 சமனான தவணைகளில் கடன் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் எதுவித கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த பணத்தை வழங்கியமையால் வவுனியா டிப்போவிற்கு நிலையான வைப்புகளின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படவிருந்த ரூபா 6,754,832 வருடாந்த வட்டி இழக்கப்பட்டிருந்தது.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.